பேரறிஞர்
அண்ணா



# இலக்கியச் சோலை

ம.செ

# இலக்கியச் சோலை

பேரறிஞர்
டாக்டர் சி.என். அண்ணாதுரை, எம்.ஏ.,

பூம்புகார் பதிப்பகம்
63, பிராட்வே
சென்னை-600 108
தொலைபேசி: 513143

விலை ரூ. **10.00**

பூம்புகார் வெளியீட்டு எண்: 247
முதற் பதிப்பு: 1988
இரண்டாம் பதிப்பு: பிப்ரவரி, 1994
உரிமை: திருமதி இராணி அண்ணாதுரை

---

அச்சிட்டவர்கள்: பூம்புகார் பதிப்பகம் (பிரஸ்), சென்னை-600 108.

## தோரண வாயில்

பேரறிஞர் அண்ணாவின் பல்துறை ஆற்றல் யாவரும் அறிந்ததே. அவருடைய எழுத்துக்கள், படைப்புகள் காலத்தை வென்று நிற்பவை. அவர் எழுதிய சிறுகதைகள் 90; நெடுங்கதைகள் 14; ஓரங்க நாடகங்கள் 42; நாடகங்கள் 10; கவிதைகள் 73; இன்னும் தம்பிக்கு கடிதங்கள் 290. தலையங்கங்கள் கட்டுரைகள் ஏராளம். அறிஞர் அண்ணா அவர்களின் இலக்கியப் பணி, இவைகளோடு ஒப்பிடும் போது மிகக் குறைவு எனலாம். அவருடைய சமுதாயப் பணி அரசியல் பணி இவைகளே அவர் வாழ்க்கையின் முழு நேரத்தையும் ஆக்ரமித்துக் கொண்டிருந்ததால், இலக்கியப் பணியை அவரால் முழுமையாக நிறைவேற்ற முடியாது போனது 'உள்ளங்கை நெல்லிக் கனி'யாக தெளிவாகிறது. அவர் 'தம்பிக்கு, எழுதிய கடிதங்களில் மேடைப்பேச்சுக்களில் ஆற்றிய இலக்கியப் பணிகூட சமுதாய எழுச்சிக்கும் அவர் நடாத்திய விடுதலை இயக்கத்திற்கும் தன் தம்பியர் படையை தயார் செய்ததற்குத்தான் பயன் படுத்தியிருக்கிறார். தம்பிக்கு கடிதத்தில் கூட, கருத்து விளக்கக் கதைகளை எழுதி 'தம்பி, கருத்து விளக்கத்திற்கு இந்தக் கதை...வெறும் கதை பேசும் பழக்கம்தான்நம்மிடம்கிடையாதே'

எனச் சொல்லியிருப்பது இங்கே கருத்தில் கொள்ள வேண்டும்.

தம்பிக்கு கடிதத்தில் வந்த இலக்கிய கட்டுரைகள், தனியாக எழுதிய இலக்கியக் கட்டு ரைகள் இவைகளை தொகுத்து இங்கே அளித் திருக்கிறேன்.

அப்படி தொகுத்த சில முத்துக்கள் அகநானூறு, புறநானூறு கலிங்கத்துப் பரணி, சிலப்பதிகாரம், திருக்குறள் ஆகியவைகளிலிருந்து எடுக்கப்பட்டவை. இதில் அண்ணாவின் கைவண்ணம் காணலாம். அறிஞர் அண்ணாவின் இலக்கியச் சுவையைத் தமிழர்கள் பருக வேண்டும் என்ற அவாவின் உந்துதலே இந்த தொகுப்பின் பின்னணி.

**டாக்டர் சி. என். ஏ. பரிமளம்**

## பதிப்புரை

தமிழ்நாடு மிகவும் தொன்மை உடைய நாடு; தமிழ் மிகவும் தொன்மையான மொழி. பழந்தமிழகம் செய்தியால் விரிந்ததாகவும், சிறப்பால் ஆழ்ந்ததாகவும் வரலாற்றுச் சான்றுகள் எட்டமுடியாத அளவு உயர்ந்த தாகவும் விளங்குகிறது.

ரசனைக்காக எழுதுவதைவிட, கவலையை மறப் பதற்காக கற்பனையில் பறப்பதைவிட, பொழுது போக் கிற்காக படிப்பதைவிட, நேரிடையாகவே பழந் தமிழ கத்தைக் காண—பழந் தமிழ் மக்களைக் காண அமரர் அண்ணா அவர்கள் புறநானூறு, கலிங்கத்துப்பரணி, சிலப்பதிகாரம், திருக்குறள், முல்லைப்பாட்டு ஆகிய சங்க கால நூல்களுக்கு நம்மை அழைத்துச் செல்கிறார்கள் இந்நூலின் மூலம்.

அண்ணாவின் இலக்கியச் சோலையில் புகும் நாம், அவர் காட்டும் வழியினை—நெறியினை போற்றிப் புகழ்வ தோடு, நடை முறையில் கொண்டு, நம் வாழ்வினை விழுப்பமுடையதாக்க வேண்டுகிறோம்.

இந்தச் சோலையை அமரர் அண்ணா அவர்கள் தம் கரத்தில் ஏந்தித் தவழ விட்டிருக்கும் பாங்கை நீங்கள் இதில் பரவலாகக் காணலாம்.

அண்ணாவின் கைவண்ணத்தைக் காண இதை நமக்கு தொகுத்துக் கொடுத்த டாக்டர். சி. என். ஏ. பரிமளம் அவர்களுக்கும், உரிமை வழங்கிய திருமதி இராணி அண்ணாதுரை அவர்கட்கும் வாசகர்களாகிய உங்களின் சார்பில் எங்களின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—பூம்புகார் பதிப்பகத்தார்

## பொருளடக்கம்


1) பழந்தமிழகம் 7

மொழிவளம் 8

கவிதைவளம் 19

பழந்தமிழர் போர்திறன் 23

2) சிலப்பதிகாரம் 30

மாதவியின் ஒப்பனை 33

3) புறநானூறு

தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் 35

புறநானூற்று காட்சி 37

4) நெடுநல்வாடை

பாசறையில் நெடுஞ்செழியன் பாங்கு! 40

பிரிவு 41

5) முல்லைப்பாட்டு 44

பாரி பறித்த பறி 45

6) பட்டினப்பாலை 47

7) மலைப்படுகடாம் 49

8) குறிஞ்சிக் காட்சி 50

9) நிலமடந்தை 53

10) கலிங்கத்துப்பரணி 56

11) பூங்காவில் புலவர் 60

12) பைங்கிளிக்கும் பாலூட்டும் செந்தாமரையாள் 73

# இலக்கியச் சோலை

## 1
## பழந்தமிழகம்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே, பூம்புகாரும், கொற்கை, தொண்டி, முசிரி, எனும் பல்வேறு துறைமுகங்கள் கொண்டதாய் விளங்கியது எந்த நாடோ, எந்த நாட்டிலே முரசு மூன்று, தமிழ் மூன்று வகை என்றும், தானை நால்வகை, போர் முறை பல்வேறு வகை, கருவிகள் பலப்பல என்றும் வகுத்து வைக்கப்பட்டிருந்தனவோ, எந்த நாட்டிலே நிலமே ஐவகையாக இயல்பும் எழிலும் பயனும் கருத்தில் கொண்டு வகுக்கப்பட்டு இருந்ததோ, எந்த நாட்டு முத்தும் பவழமும் பிறநாட்டுப் பேரரசர்கள் தமது காதலைப் பெற்ற கட்டழகியர்க்குக் காணிக்கையாக்கிக் களித்தனரோ, எந்த நாட்டுப் புலவர்கள் புவியாளுவோரையும் துச்சமென்றெண்ணி அறநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றனரோ, எந்த நாட்டிலே முகிலின் முழக்கமும் முழவின் ஒலியும், மின்னல் ஒளியும் கன்னல் சுவையும், ஆடலழகியரின் கடையிடையும் ஆற்றலரசர்களின் கட்டாரியும் கொல்லவும் வெல்லவும் பயன் பட்டனவோ, எங்கு,

நற்றிணை நல்ல குறுந்தொகை
ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப் பத்து
ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு
அகம் புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்றபடி, பேரிலக்கியங்கள், கற்றோர் ஈட்டிய கருவூலமாக உளதோ, அந்த நாடு, எட்டுத் திக்கும் ஒரு காலத்தில் புகழ்க் கொடி பட்டொளி வீசிப் பறந்திட்டதாம்! முத்துப் பந்தலளித்து முழங்காற்படியிட்டுப் பணிந்தான் ஓர் மன்னன்!

தந்தக் குவியல்களைக் காலடியில் கொட்டி, அரசர்க்கரசே! என்று அஞ்சலி செய்தான் மற்றோர் வேந்தன். படை கொண்டு வருவேன் என்று கூறினதும், திறை கொண்டு வந்தேன் என்று பதிலிறுத்தனர் மன்னர் பலர். காவிரிக் கரையிலே காதல் கீதம் பாடிய கட்டிளம் காளை, கட்கம் ஏந்திக் கங்கைக் கரையினரைப் போரிலே வென்று, அவர்தம் தேர்ச்சிலைச் சீலையினை, தமக்கு அதரத்தேனளித்து ஆட்கொண்ட ஆரணங்குகள் விளையாட வைத்திருந்த பொம்மைகளுக்கு அளித்தானாம்.

நமக்குக் கிடைத்திருக்கின்ற தாய் மொழி பிற மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்தில், பிற மொழியாளர்களெல்லாம் பார்த்து,இவ்வளவு எழிலுள்ள மொழியா உங்களுடையது? இவ்வளவு ஏற்றம் படைத்த இலக்கியமா உங்களிடத்தில் உள்ளது? இவ்வளவு சிறந்த இலக்கணத்தையா நீங்கள் பெற்றிருக்கிறீர்கள்? ஈராயிரம் ஆண்டுக் காலமாகவா இந்த மொழி சிதையாமல் சீர்குலையாமல் இருந்து வருகின்றது? என்று ஆவலுடன் பலரும் கேட்கத் தக்க நல்ல நிலையிலேதான் தமிழ்மொழி இருக்கின்றது.

## மொழிவளம் :

தமிழ் மொழி வேறெல்லா மொழிகளையும்விட உயர்ந்தது என்று மார்தட்டத் தேவையுமில்லை; அது அழகுமாகாது.

கா
மா
வா
தா
போ
பா
பூ
தை
வை

கை
தீ
ஈ
நீ
சீ
தூ

இப்படி ஒரே எழுத்துக்கூடத் தமிழ் மொழியில் பொருளளிக்கும் திறம் பெற்றுத் திகழக் காண்கிறோம்.

முறையுடன் தந்திடின் எத்துணை எழில் கிடைக்கிறது என்பதை இதோ இந்தப் பள்ளு எடுத்துக் காட்டுகிறது—பார்.

வானக் குரிசில் வள்ளலாய்—வரைக்
கோனைப் பரிசு கொள்ளலாய்
வழங்கு மாறும் புறப்பட்டே—புனல்
முழங்கு மாறும் தலைப்பட்டே
தானக் களிறு படிந்திடக்—கொலை
ஏனக் களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும்—பசும்
கரையின் ஆரம் சிந்தியும்
கானக் குளவி அலையவே—மது
பானக் களவி கலையவே

முக்கூடற்பள்ளு தரும் ஓசை நயம் இங்ஙனம் அமைந்திருக்கிறது.

தமிழ் இனம், பண்பு கெடாத நாட்களில் பாராண்ட பாங்கு பற்றி, படிக்குந்தொறும் பாகெனச் சுவை அளித்திடும் பாக்களைக் காண்கிறோம்; பெருமூச்செறிகிறோம்.

கோடும் குவடும் பொரு தரங்கக்
குமரித் துறையில் படு முத்தும்
கொற்கைத் துறையில் துறை வாணர்
குவிக்கும் சலாபக் குவால் முத்தும்

ஆடும் பெருந்தண் துறைப் பொருனை
ஆற்றில் படுதெண் ணிலா முத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சாரல்
அருவி சொரியும் குளிர் முத்தும்!

என்று பாடுகிறார்கள்—உன் தமிழகம் முத்தும் மணியும் ஒளி தர விளங்கிய உயிரோவியம் என்பதனை அறிந்திடுக! அன்று புலவர் பெருமக்கள் பொருளுரையும் பொழிப்புரையும் கூறுகின்றனர். முத்து கூத்தாடுமாமே அந்தையர் நாட்களில், வறுமை முடைநாற்ற மன்றோ துளைக்கிறது என்று எண்ணுகிறோம், ஏங்கித் தவிக்கிறோம்.

''குன்றின் இள வாடை வரும் பொழுதெல்லாம்
மலர்ந்த திருக்கொன்றை நாறத்
தென்றல் வரும் பொழுதெல்லாம் செழுஞ் சாந்தின்
மணநாறும் செல்வவீதி...''

என்று கூறுகிறார் புலவர்—தமிழகத்தின் புகழ் மணம், சூழ்ந்திருந்த அந்த நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

தமிழின் தொன்மை, மென்மை, தூய்மை, பொலிவு யாவும் இப்போது மக்கள் மன்றத்திலே எடுத்துரைக்கப் பட்டு, மனைகளில் பேசிக் கொள்ளப்படுகின்றன.

புறநானூறு பாடிய புலவர் பெருமக்கள்—
பெண்பாற் புலவரும் உண்டு—

எத்துணைப் பழங்காலத்திலே புறநானூறு எழுந்தது. அக்காலத்தே, உலகிலே பல நாடுகள், உருவம் கூடப் பெறவில்லை. நாடான பலவற்றிலே மொழிவளம் இல்லை, மொழி வளம் இருந்த இடங்களிலும் இலக்கியம் எழவில்லை; இங்கொன்றும் அங்கொன்றுமாக இலக்கியம் எழுந்த இடங்களிலும், இத்துணைப் புலவர்கள் இருந்ததில்லை; அதிலும் பெண்பாற் புலவர்கள் இங்கு இருந்தது போல, அளவிலாயினும் சரி, தரத்திலாயினும் சரி, மற்ற இடங்களிலே இருந்ததாக யாரும் கூறினாரில்லை.

எத்துணை வாழ்க்கை வளம், அரசு நெறி, சீர் இருந்தால் இத்துணைப் புலவர்கள், இன்றளவும் இவை போன்ற அருங்கவிதை இல்லை என்று கற்றோர் வியந்திடும் தரமான கவிதைகளை இயற்றி இருக்க முடியும் என்பதை எண்ணிபார்க்க வேண்டும். தமிழர் எத்திறத்தவர் என்பதும் புரியும்.

அடைநெடுங்கல்வியார்
அண்டர் மகன் குறுவழுதி
அரிசில் கிழார்
அள்ளூர் நன்முல்லையார்
ஆடுதுறை மாசாத்தனார்
ஆலங்குடி வங்கனார்
ஆலத்தூர் கிழார்
ஆலியார்
ஆவூர்கிழார்
ஆவூர் மூலங்கிழார்
இடைக்காடனார்
இடைக்குன்றூர்க்கிழார்
இரும்பிடர்த் தலையார்
உலோச்சனார்
உறையூர் இளம்பொன் வாணிகனார்
உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
உறையூர் மருத்துவன் தாமோதரனார்
உறையூர் முதுகண்ணன் சாத்தனார்
உறையூர் முதுகூத்தனார்
ஊன்பொதி பசுங்குடையார்
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்
எருமை வெளியனார்
ஐயாதிச் சிறுவெண்டரையர்
ஐயூர் முடவனார்
ஐயூர் மூலங்கிழார்
ஒக்கூர் மாசாத்தனார்
ஒக்கூர் மாசாத்தியார்

ஒருசிறைப் பெரியனார்
ஒரு உத்தனார்
ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்
ஓரம்போகியார்
ஓரேருழவர்
ஔவையார்
கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி
கண்ணகனார்
கணியன் பூங்குன்றன்
கபிலர்
கயமனார்
கருங்குழலாதனார்
கருவூர்க் கதப்பிள்ளை
கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார்
கல்லாடனார்
கழாத்தலையார்
கழைதின் யானையார்
கள்ளில் ஆத்திரையனார்
காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்
காரிகிழார்
கரவட்டனார்
காவற்பெண்டு
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்
குட்டுவன் கீரனார்
குடபுலவியனார்
குடவாயிற் கீரத்தனார்
குண்டுகட் பாலியாதன்
குறமகள் இளவெயினி
குறுங்கோழியூர்க் கிழார்
குன்றூர்க்கிகிழார் மகனார்
கூகைக் கோழியார்
கூடலூர்க்கிழார்
கோடைபாடிய பெரும்பூதனார்
கோதமனார்

கோப்பெருஞ் சோழன்
கோவூர்கிழார்
கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்
சங்கவருணரென்னும் நாகரியர்
சாத்தந்தையார்
சிறுவெண்டரையார்
சேரமான் கணைக்காலிரும்பொறை
சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்
சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்
சோழன் நல்லுருத்திரன்
சோழன் நலங்கிள்ளி
தன்காற்பூட் கொல்லனார்
தாமப்பல கண்ணனார்
தாயங்கண்ணனார்
தாயங்கண்ணியார்
திருத்தாமனார்
தும்பி சோகினனார்
துறையூர் ஓடைகிழார்
தொடித்தலை விழுத்தண்டினார்
தொண்டைமான் இளந்திரையன்
நரிவெரூ உத்தலையார்
நல்லிறையனார்
நன்னாகனார்
நெட்டிமையார்
நெடுங்கழுத்துப் பரணர்
நெடும்பல்லியத்தனார்
நொச்சி நியமங்கிழார்
பக்குடுகை நன்கணியார்
பரணர்
பாண்டரங்கண்ணனார்
பாண்டியன் அறிவுடை நம்பி
பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்
பெருந்தேவனார்
பாரி மகளிர்
பாலை பாடிய பெருங்கடுங்கோ
பிசிராந்தையார்
பிரமனார்
புல்லாற்றூர் எயிற்றியனார்
புறத்திணை நன்னாகனார்
பூங்கணுத்திரையார்
பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு
பெருங்குன்றூர்கிழார்
பெருங்கோழி நாய்க்கன் மகள் நக்கண்ணையார்
பெருஞ்சித்திரனார்
பெருந்தலைச் சாத்தனார்
பெரும்பதுமனார்
பேய்மகள் இளவெயினி
பேரெயின் முறுவலார்
பொத்தியார்
பொய்கையார்
பொருந்திலிளங்கீரனார்
பொன்முடியார்
மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்
மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்
மதுரை ஓலைக்கடைக்கண்ணம் புகுந்தாராயத் தனார்
மதுரைக் கணக்காயனார்
மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார்
மதுரைக் கள்ளின் கடையத்தன் வெண்ணாகனார்
மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்
மதுரைத் தமிழ்க் கூத்தனார்
மதுரை நக்கீரர்
மதுரைப் படைமங்கமன்னியார்
மதுரைப் பூதனிளநாகனார்

மதுரைப் பேராலவாயார்
மதுரை மருதனிள நாகனார்
மதுரை வேளாசான்
மருதனிள நாகனார்
மாங்குடி கிழார்
மாதி மாதிரத்தனார்
மார்க்கண்டேயனார்
மாற்பித்தியார்
மாறோக்கத்து நப்பசலையார்
முரஞ்சியூர் முடிநாகராயர்
மோசி கீரனார்
மோசி சாத்தனார்
வடம நெடுந்தத்தனார்
வடமவண்ணக்கன் தாமோதரனார்
வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்
வடமவண்ணக்கன் பேரிசாத்தனார்
வடமோதங்கிழார்
வன்பரணர்
வான்மீகியார்
விரிச்சியூர் நன்னாகனார்
விரியூர் நக்கனார்
வீரை வெளியனார்
வெண்ணிக் குயத்தியார்
வெள்ளெருக்கிலையார்
வெள்ளைக்குடி நாகனார்
வெள்ளை மாளர்
வெறி பாடிய காமக்கண்ணியார்
வேம்பற்றூர்க் குமரனார்

மிகுந்த ஆராய்ச்சிக்குப் பிறகு, கிடைத்துள்ள புலவர் வரிசை இது. இன்னமும் கண்டறிய வேண்டிய பெயர்களும் உள்ளன.

ஒவ்வோர் புலவரும் ஒன்று அல்லது இரண்டு கவிதைகளே இயற்றினர்; இன்றும் அவைகட்கு உயிரூட்டம்

உள்ளன! என்ன பொருள்? அத்துணை புலமையை அதிலே வடித்துள்ளனர்! தமிழர்!

அற்றை நாளில் அப்பெரும்புலவோர் அளித்தனவெல்லாம் இற்றை நாளில் நாம் எடுத்தியம்பலால், முற்றும் அவர் உரை ஏற்றோம் என்று பொருள்கொளல் வேண்டாம். அவர் திறம் வியந்திடவும், அந்நாளிலே இருந்த புலமை வளம் கண்டு மகிழ்ந்திடவும், கூறுகிறோம். அவர் அறிவாற்றல் பெரிது; ஆயினும், அதனினும் பெரிது காலம் கனிந்தளிக்கும் கருத்துப் படையல்கள் அன்று அவர் கண்ட உண்மை பல உண்டு எனினும், மேலும் பல உண்மை காணும் வாய்ப்பு, காலம் சமைத்தளிக்கக் காண்கிறோம்.

முடியுடை மூவேந்தர்கள் மட்டுமல்ல; குறுநில மன்னர்கள், வேளிர்கள், பலரும்கூடப் புலவர் பெருமக்களை ஊக்குவித்தனர். கவிதை பெருக்கெடுத்தது; தமிழ் மணம் கமழ்ந்தது. அந்நிலை காட்டவே அவர் பெயர் கூறி மகிழ்கிறோம்.

பழனிமலைப் பேகன், பறம்புமலைப் பாரி; கோடைமலை நெடுவேட்டுவன்; கொல்லி மலை ஓரி; பொதியமலை ஆய் ஆண்டிரன்; குதிரைமலை அதிகமான்; முதிரமலைக் குமணன்; தோட்டிமலைப் பெரு நள்ளி

பூவார் சோலை மயிலாடப்
 புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
 நடந்தாய் வாழி காவேரி!

என்று பாடினார் இளங்கோ.

''கொங்கும் வேங்கையும் ஓங்கி வளரும்;
குரவமும் முல்லையும் நறுமணம் கமழும்;
கோலமாமயில் தோகை விரித்தாடும்;
தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும்''

என்றார் தமிழ்ப் புலவர்.

அன்பார்ந்த குழவியை அழகிய மஞ்சத்தில் அமைத்து, அதன் மேனியைக் கைகளால் தடவித் துயில்விக்கும் அன்னை போல் ஈரம் வாய்ந்த பொய்கை, கமலப் பள்ளியில் அமர்ந்த அன்னத்தைத் தன் அலைக் கைகளால் தட்டித் துயில் வித்தது—என்று ஓவியம் தீட்டுகிறார், கவிதை வடிவில் மற் றோர் மாத்தமிழர்.

வியக்கத்தக்க காட்சிகளைக் கவிதைகளாக்குவதுடன் அமைந்தனரோ? அன்று! அன்று! அறம் உரைத்தனர்! அரசருக்கும் அஞ்சாது அறநெறியை எடுத்துரைத்தனர். வெற்றுரையாம் பழமையிலா அவர்தம் மனம் படிந்திருந் தது? இல்லை! புது மொழியில் திளைத்தனர்.

செதுமொழி சீத்த செவிசெறு வாக
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர!

புது மொழிவழி அவர்தம் நாட்டம் தொடர்ந்து சென்றதனால், விளைந்த எண்ணம் ஓர்வகை சுற்றுச் சார்பை ஏற்படுத்தியதால்தான், பக்தி மார்க்கத்தைப் புகுத்த வந்த புனிதர்களேகூட, எவரும் எங்கும் எஞ்ஞான் றும் வாதிடும் கடவுட் கொள்கை பற்றி.

கழியுளா ரெனவுங் கடலுளா ரெனவுங்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவு மலையுளா ரெனவு
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்

என்று கூற வேண்டி வந்தது.

'கண்ணுதலோனை'க் காண்மின் என்று கூறப்போந்த சுந்தரரே, தமிழர்கள், கடவுள் பற்றிய கட்டுக் கதைகளை மட்டும் கூறினால் கேட்டு இன்புறார், என்று அச்சப்பட்ட வர்போல், அவர் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் தலத்தைக் காண்மினோ என்ன வேண்டுகிறார்.

கண்ணுதலோன் மேவிய ஊர்வினன்
அரும்பருகே சுரும்பருவ
அறுபதம் (வண்டு) பண்பாட
அணிமயில்கள் நடமாடும்
அணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை
கண்வளரும் கழனி
கமலங்கள் முகம்மலரும்
கலயநல்லூர் காணே!

என்று பாடி, அரும்பு, கரும்பு, வண்டு, மயில், கருங்குவளை கமலம் ஆகியவற்றினைக் காட்டி இப்படிப்பட்ட அழகு மல்கும் ஊர் காண்மின் என்கிறார்.

இயற்கையின் இனிய கோலத்தில், தமிழர் கொண் டிருந்த பேரார்வத்துக்கு இதனினும் சான்று வேண்டுமோ!

இறவாப் புகழ் பெற்ற நூற்கள் இயற்றப்பட்டன; அதுமட்டுமன்று. நூல், எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதற்கே, விளக்கம் கண்டனர் அந்த நாளிலே.

நூலெனப் படுவது நுவலுங் காலை
நுதலிய பொருளை முதலில் கூறி
முதல்நடு இறுதி மாறுகோள் இன்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றமைந்த உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே.

எல்லா எழிலும் நிரம்பிய நாடு மட்டுமல்ல, எதிலும் எழிலும் ஏற்றமும் பெறுதல் எங்ஙனம் என்ற 'இலக்கணம்' வகுத்துக் கொண்ட நாடு.

''பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்'' என்றார் புலவர். அவ்வழியே நம் வழியாதல் வேண்டும்!.

## கவிதைவளம்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு, புலவர் பெருமக்கள், இயற்றியது அகம்—புறம்—எனும் இரண்டினை! அறிந்து இயற்றினர், அஃது மக்கட்குத் தேவைஎன்பதால். கட்டற்ற களியாட்டத்துக்கு அல்ல, இல்லற இன்பம் குறைவற்றதாக இருத்தல் வேண்டும், வாழ்க்கை ஒரு கலை, அதனை மக்கள் உய்த்து உணர வேண்டும் என்ற பெரு நோக்குடன் இயற்றினர். நுண்ணறிவும், நோக்கிடும் திறனும், பொருள் கொண்டிடும் நேர்த்தியும் செறிந்த முறையில் இயற்றினர். காணும் பொருளுக்குத் காணாப் பொருளை உவமை காட்டி. குருடனைக் கொண்டு குருடனை அழைத்துச் செல்லச் சொன்னாரில்லை.

ஆடும் மயில் அந்த ஆரணங்கு என்றனர்! வீரத்திலே மலையைப் பிளந்திடும் மதகரி என்றனர்! 'அவனும் அவளும்' பொழிவில் உலவியதை பெடையுடன் ஆடிடும் புள்ளினம், மடப்பிடியுடன் களிறு களித்தாடுவது, இவை களைக் கூறினர்.

ஒரு யானை! அது ஒரு நாள், தன் பிடி முன் வர வெட்கப்பட்டுக் கொண்டு புறக்கடைப் பக்கம் போய் நின்றதாம்! ஈதென்ன வேடிக்கை, யானை வெட்கப் படுவதா? ஏன்?

காதலி எதிரில், அலங்கோலமான நிலையில், வந்து நிற்க வெட்கமாக இராதோ உங்கட்கு. பல்லிரண்டு ஒடிந்து போய், உதடு கிழிந்து, ஆடை கலைந்து இருக்கும் நிலையில் காதலி எதிரே வந்து நிற்கத் துணிவீர்களோ? முடியாது. அதேதான் அந்தக் களிறு இருந்த நிலை. தந்தம் உடைந்து விட்டது! நகங்கள் தேய்ந்து போய் விட்டன! அந்தத் தந்தத்தைக் கண்டு கண்டு எத்தனை முறை பெண் யானை களிப்புற்றிருக்கும்; உரிமையுடன் உவகையுடன், தன் துதிக்கயைால் எத்தனை முறை தந்தத்தை வருடிற்றோ, நீ கண்டாயோ! என்ன ஒரு விதமான புன்னகை!! அன்றொரு நாள், தோளின்மீது சாய்ந்து...ஓஹோ! அதை எண்ணிக்

கொண்டாயா! யானை மட்டும் என்னவாம்! களிறு, கவலைப்படுகிறது! செ! இந்த நிலையில், மடப்பிடி என்ன எண்ணுவாளோ! எப்படி எதிரே போவது! வெட்கமாக இருக்கிறதே, என்று. எனவே, புறக்கடைப் பக்கம் சென்று நிற்கிறது.

தந்தம் ஒடிந்தது ஏன் தெரிகிறதா?

கொடி மதில் பாய்ந்தது—போரில்! கோட்டைச் சுவ ரினைக் கோடு கொண்டு—தந்தத்தைக் கொண்டு, தாக் கிற்று! கோட்டைச் சுவரும் இடிந்தது, தந்தமும் உடைந்தது. போரின் காரணமாகத்தான் நகமும் தேய்ந்தது! இதைப் பெண் யானை பிறகு, தானே தெரிந்து கொள்ளும் பார்த்த தும்! என்ன அலங்கோலம் இது! கோடு உடைந்து கிடக் கிறதே! என்று கேட்டுக் கேலி செய்யுமே! அந்த எண்ணம், ஆண் யானைக்கு!

வெறும் காதல் மட்டுமா, இதிலே காணக்கிடக்கிறது! தமிழர் போர் முறை விளக்கப்படுகிறது! மனப் போக்குத் தெரிவிக்கப்படுகிறது. அரிய நகைச் சுவை ததும்புகிறது! இத்தனையம் தமிழ்! அந்தத் தமிழ், நமது மொழி!

பழந்தமிழ்ப் புலவர்களின் கண்கள் இயற்கையைத் துருவித் துருவி ஆராய்ந்தன; சங்க காலப் பாக்களில், எத்தனை பூக்களைப் பற்றிய செய்தி அறிகிறோம். அன்று அவர் ஆக்கிய கவிதைகளினால், காவும், கனியும், கரியும், கடுவனும், அருவியும் அளி வண்டும், இன்றும் நமக்குத் தெரிகின்றன.

இதோ நாரையைப் பார், நிம்மதியாகத் தூங்குகிறது! இளம் காற்று வருடினால், தூக்கம் ஏன் வாராது?

அதுவும் மாமரத்தின் இளந்தளிர், தடவிக் கொடுக் கிறது. இனிமையான தூக்கம் நாரைக்கு.

மாத்தின் இளந்தளிர் வருட
வார்குரு உறங்கும்.

ஆமாம், புலவர் ஏன் நாரையைக் காட்டினார்? நாரையை அல்லது அதன் தூக்கத்தைக் காண்பதிலே, என்ன இன்பம்! இது சாதாரண நாரைதானே. இதை ஏன், புலவர் காட்டுகிறார். காரணத்தோடுதான். தகுந்த காரணத்தோடு நாட்டிலே இருந்த இயற்கை வளத்தைக் காட்டுகிறார், வெறும் நாரையை மட்டும் அல்ல.

கழனிக் கரும்பின் சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயில் கொள்ளும்.

நன்செய் நிலத்தில் வளர்ந்துள்ளது கரும்பு, ஆமைக்கு இளவெயிலில் காய்ந்து இன்புறும் எண்ணம். கரும்பின் வழியாக ஏறிக் காலை இளம் வெயிலில் காய்கிறது.

மாத்தின் இளந்தளிர் வருட
வார்குருகு உறங்கும்
நீர்சூழ் வளவயல்

கண்டனர்; கவி சுரந்தது.

நீர் வளமிக்க வயலோரம் உள்ள மாமரத்தின் தளிர் தடவிக் கொடுக்க, நாரை இனிது உறங்குகிறதாம்!

கழனிக் கரும்பின்
சாய்ப்புறம் ஊர்ந்து
பழன யாமை பசுவெயில் கொள்ளும்.

பாங்கினைப் பார்க்கிறார் புலவர்.

நன்செய் நிலத்தில் விளைந்துள்ள கரும்பின் வழி ஏறிக் காலை இளவெயிலில் ஆமை காய்கிறதாம்.

இரவெல்லாம், பாவம், நீர் நிரம்பிய இடத்திலிருந்த தால், உடலுக்கு வெப்பம் தேவைப்படுகிறது; இளவெயி லில் காய்கிறது, ஆமை.

கவனித்தனையா, புலவர் தந்துள்ள கருத்துள்ள பதம் ஒன்றை—காலை வெயில் என்று கூறினார் இல்லை—வெயிலில் காய்ந்தது என்று சொன்னாரில்லை — பசு வெயில் என்கிறார்—செல்லமாக!!

ஆமை, வெயிலிலேயே நீண்டநேரம் இருக்கப் போவ தில்லை—என்று புலவர் கூறுகிறாரே, ஏன்? இதன் பொருள் அவர் கூறியதிலே தொக்கி இருக்கிறது. கரும்பின் மீது ஏறி அல்லவா ஆமை பசு வெயில் கொள்கிறது! கரும்பின் மீது எப்படி ஆமை அதிக நேரம் இருந்திட இயலும். உழவன், அப்பக்கம் வந்து விடுவானன்றோ!

மாந்தளிர் தடவிக் கொடுக்கத் துயில் கொள்ளும் நாரை! கரும்பினில் ஏறிப் பசு வெயில் கொள்ளும் ஆமை!

உறங்கும் நிலை! விழித்து நடமாடி உடலுக்கு வெப்பம் பெறும் நிலை.

நெடுங்கழி துழைஇய
குறுங்கால் அன்னம்
அடுப்பு அமர் எக்கர்
அம்சிறை உலரும்!

உப்பங்கழியிலே மீன் தேடி உண்ட அன்னம், அடும்பங்கொடி படர்ந்திருக்கும் மணல் மேட்டில் ஏறித் தன் சிறகை உலர்த்திக் கொள்கிறது.

ஏறக்குறைய நீராடிவிட்டு வந்து உடலை உலர்த்திக் கொள்வது போன்றது.

இதுபோல, இயற்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், எழில் கண்டு இன்புற மட்டுமல்ல, பயன் பெற்றிடவும், இயற்கையின் பொருள் விளக்கிக் கொள்ளவும் முடிந்தது, பழந்தமிழர்களால்.

நாட்டு வளம் மட்டுமா? புலவர்கள், இயற்கைக் காட்சிகளை எவ்வளவு அழகுறப் படமெடுத்திருக் கிறார்கள் என்பதல்லவா முக்கியம்.

இயற்கை வளம் காட்டுவதுடன் நின்றாரில்லை, அரசர்கள் முறை தவறி நடந்தகாலை இடித்துரைத்தனர். கோல் கோணாதிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்தினர்.

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ
காற்றும் சிலரை நீக்கி வீசுமோ
மானிலம் சுமக்க மாட்டேன் என்னுமோ
கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே.

என்று பாடியுள்ளனரே.

சிறப்பும் சீலமும் அல்லாது
பிறப்பு நலந்தருமோ பேதையீரே!

என்று கேட்கிறார், புலவர்.

சிறைப்பட்ட மன்னனுக்குத் தாங்க முடியாத தாகம் ஏற்பட்டது. காவலாளியோ பருக நீர் கொடுக்கும்போது மரியாதைக் குறைவாகக் கொடுத்தானாம். மானம் பெரிது, உயிரல்ல, என்று எண்ணிய அந்த மறத் தமிழன், நீர் பருகாதிருந்து உயிர் நீத்தான் என்று பாடல் இருக்கிறது.

## பழந்தமிழர் போர் திறன் :

தமிழர்கள், அந்த நாட்களிலேயே நால்வகைப் படைகளைக் கொண்டிருந்தது மட்டும் அல்ல,

கடலரண்
காட்டரண்
மலையரண்
மதிலரண்

எனும் பாதுகாப்புகளையும் பெற்றிருந்தனர். போர் முறை களிலேயும் புதுக்கருத்துகள் கொண்டதனால், அற்றை நாளில் தமிழர் பெற்ற வெற்றிகள், இன்றும் எண்ணி வியக் கத்தக்கனவாக உள்ளன. நெடுந்தொலைவு படையுடன் சென்று போரிட்டு வெற்றி பெற்ற வீரக்கதைகள் பலப் பல. போரிலே வெற்றி காண வீரம், அடிப்படை என்பது மறுக்கொணாத உண்மை என்றாலும், போர்க்கருவிகளின் தன்மையும் மிகவும் முக்கியமானது என்பதை ஆய்ந்தறிந்து உணர்ந்திருந்ததால், பிறநாட்டாரிடம் இல்லாத பல்வேறு வகையான போர்க்கருவிகளைக் கொண்டிருந்தனர்.

| | |
|---|---|
| வளைவிற் பொறி | தள்ளி வெட்டி |
| கருவிரலூகம் | களிற்றுப்பொறி |
| கல்லுமிழ் கவண் | விழுங்கும் பாம்பு |
| கல்லிடு கூடை | கழுகுப் பொறி |
| இடங்கணி | புலிப்பொறி |
| தூண்டில் | குடப்பாம்பு |
| ஆண்டலையடுப்பு | சகடப்பொறி |
| கவை | தகர்ப்பொறி |
| கழு | அரிநூற்பொறி |
| புதை | குருவித்தலை |
| ஐயவித்துலாம் | பிண்டிபாலம் |
| கைப்பெயர் ஊசி | தோமரம் |
| எரிசிரல் | நாராசம் |
| பன்றி | சுழல்படை |
| பனை | சிறுசவளம் |
| எழு | பெருஞ்சவளம் |
| மழு | தாமணி |
| சீப்பு | முசுண்டி |
| கணையம் | முசலம் |
| சதக்களி | |

இத்தனை விதமான, புதுமுறைப் போர்க்கருவிகள் இருந்தன, இத்துடன், தமிழரிடம், தனியாக வீரர் தம தாற்றலை விளக்கப் போர்வாளும் கேடயமும் ஈட்டியும் உண்டு. தமிழரை எதிர்த்த மாற்றார்களிடமும் பிற நாட்டவரிடமும் வேல், வில், அம்பு, சிறுவாள், கொடுவாள், அரிவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கோடரி, ஈட்டி, குறுந்தடி என்பன மட்டுமே இருந்த நாட்களில்.

இன்று விஞ்ஞான அறிவுப் பெருக்கத்தின் காரணமாகக் கிடைக்கப் பெற்றுள்ள போர்க் கருவிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழர் பெற்றிருந்தவை, மிகமிகச் சாதாரணம்; இப்போதைக்குப் பயன் தருவன அல்ல. இவை தமிழரிடம் இருந்த நாட்களில் மற்ற நாட்டவரிடம் இருந்தன யாவை என்பதனை ஒப்பிடும்போதுதான் சிறப்பு விளங்கும்.

களமே சென்று பார்ப்போம்!

அதோ, பார்த்தனையா; பகைக் கூட்டத்தார் உடைவாளை உருவிக்கொண்டு பாய்ந்து வருகின்றனர், தமிழரைத் தாக்க! தமிழர்களும் உடைவாளை உருவிக் கொண்டு போரிடப் போகிறார்கள் என்று எண்ணுகிறாய்; இரு பிரிவினரிடமும் உடைவாள் இருப்பினும், வாள் வீச்சு முறையின் நேர்த்தியாலேயும், களத்திலே காட்டிடும் துணிவாலும், போரிடும்போது எழும் துரிதத் தன்மையாலும், தமிழரே வெற்றி பெறப் போகின்றனர் என்று நினைக்கிறாய்—தவறல்ல! இயலும். ஆனால் இதோ கவனி...பாய்ந்து வருகிற பகைப் படைமீது, மழை பொழிவது போல அம்புகள் பாய்கின்றன—அலறித்துடிப்பதைப் பார்! இவ்வளவு அம்புகளை விட வேண்டுமானால் ஒரு பெரும் படை, களத்திலே

எதிர்ப்புறம் நிற்கவேண்டுமே, தெரிகிறதா, இல்லை அங்ஙன மெனின் எப்படி இது முடிகிறது?

உற்றுக் கவனித்தால் தெரியும்! அவ்வளவு அம்புகளும், தமிழர்களின் கோட்டையிலிருந்து கிளம்பு கின்றன. கோட்டை மதிற் சுவரின்மீது நின்றுகொண் டல்லவா, இதனைச் செய்ய முடியும்? ஆமாம், என்கிறாய்; ஆனால், கோட்டை மதிற் சுவரிலே ஒருவரும் இல்லையே!

விந்தைதான் என்கிறாய்! விந்தை விளக்கப்படுகிறது பாரேன்.

நிறைய அம்புகளைக் கோத்து விட்டால், தானே வளைந்து மிக வேகமாக எதிரிகள் மீது பாயும் முறை கொண்டது, வளைவிற் பொறி! அந்தப் பொறிதான் இந்தப் போடு போடுகிறது!

வளைவிற் பொறி ஒன்று செய்து முடிக்கும் செயலைச் செய்திடப் பலப்பல வீரர்கள் வேண்டும்.

இந்தப் போர்க்கருவி இருப்பதனால், சிறிய அளவுள்ள படை, கோட்டைக்குள் இருந்துகொண்டே, தாக்க வரும் பகைப் படையைச் சிதைத்திட முடிகிறது.

துணிச்சல் மிக்க அப்பகைவர்களிலே சிலர், அம்புக்குத் தப்பி விடுவதுடன், கோட்டை நோக்கிப் பாய்கிறார்கள்; மதில்மீது ஏறுகிறார்கள்—அடடா! உள்ளே குதித்து விட்டால்...!!

பார்த்தனையா, எத்தனை பெரிய கருங்கற் கள் வீசப்படுகின்றன, பகைவர் மீது! மதிலிலே ஏறினவர் களின் கதியைப் பார்த்தனையா? உருண்டை வடிவமான கருங்கற்கள் மேலே விழுந்ததால் மண்டை நசுக்குண்டு, கீழே விழுகிறார்கள்—அசையக் காணோம்—எங்ஙனம் அசைய முடியும்! பிணமாயினர்!!

அவ்வளவும் கல்லுமிழ் கவண் — கல்லிடுகூடை — இடங்கணி—இந்தப் பொறிகள் செய்த வேலையன்றோ!! பகைவர் பீதி அடையாமலிருக்க முடியுமா?

அகழியிலேயே குதித்து விட்டான்—அசகாய சூரன் போல் இருக்கிறது! ஆனால், அதோ! ஏன் அலறுகிறான்? மேலே போகிறான்! மேலே தூக்கிச் செல்லப்படுகிறான்; தூண்டில் போடப்பட்டிருக்கிறது! தூண்டில் தண்ணீரிலேயே இருந்திருக்கிறது, அவன் அறிவானா அதனை? அகப்பட்டுக் கொண்டான், மீன் தூண்டிலிற் சிக்குவது போல்!

களத்திலே இருக்கும் படைமீது, வேகமாகப் பறந்து வரும் வெடி விமானங்கள் தாக்கி, படையை நாசமாக்கும் என்று இன்று படிக்கிறோமல்லவா? படையுடன் படை போரிட்டால், வீரம் காட்டலாம். விண்ணேறி வரும் விமானம், மின்னல் தாக்குதல் நடத்தும்போது, திருப்பித் தாக்க முடியுமா? துரத்திக் கொண்டு போய் அடித்து நொறுக்க முடியுமா? முடியாது.

அதோ பார், மேலே சேவல்கள்! சேவல்களா இத்தனை உயரமாகப் பறக்கின்றன! இந்தச் சேவல்கள் பறந்திட இயலும், உயிர்ச் சேவல்கள் அல்லவே! பகைவரின் உயிர் குடிக்கும் சேவல் பொறி! எப்படி உயிர் குடிக்கிறது? மேலே பறந்து, வேகமாகக் கீழே பாய்கிறது, பகைவன் தலைமீது உட்காருகிறது, மீண்டும் கிளம்புகிறது, பகைவனுடைய தலையைக் காணோம்! ஆமாம், சேவல் அவனுடைய தலையை வெட்டி வீழ்த்தி விட்டது.

இந்த வேலை செய்யவல்ல பொறி, சேவல் வடிவத்தில்; அதன் பெயர்தான் ஆண்டலையடுப்பு.

ஓஹோ! எரிசிரல் தன் வேலையைச் செய்கிறது; அதனால்தான், பகைப்படை சிதறி ஓடுகிறது, அலறியபடி. பதறி ஓடும் பகைவர்களின் கண்களைப் பறவைகள்

கொத்திக் கொண்டு போய் விட்டன. தெரிகிறதா, மீன் கொத்திப் பறவை பொறி! உயிர்ப்பறவை அல்ல! அந்தப் பொறியின் வேலை இதுதான். மேலே கிளம்பும், பகைவன் எதிரே பாய்ந்து வரும். கண்களைக் கொத்தும்; உடனே மீண்டும் மேலே போய் விடும். எவர் கரத்துக்கும் சிக்காமல் மீன்கொத்திப்பறவை வடிவத்தில் உள்ள இந்தப் பொறியின் பெயர் தான் எரிசிரல்.

அதோ மதிலின் மீது அமைக்கப்பட்டுள்ளது குரங்கு போன்ற பொறி; பெயர் கருவிரலூகம். வேலை? நெருங்கி வருபவர்களைப் பிடித்துக் கட்டிக் கொள்ளும்—உயிர் போன பிறகுதான் பிடி தளரும்—பிணம் கீழே விழும்.

இதே விதமான அழிப்பு வேலைக்காகத்தான், பன்றி நிற்கிறது! கிட்டே வருபவர்களைக் கிழித்தெறிந்து போடும் பொறி அது.

வையகம் வாழ்ந்திட வழங்குவோம் எதனையும் என்று கூறிடுவர், நேச நோக்குக் கொண்டோர்க்கு; பகைஎனிலோ, உரிமை பறித்திட எவரேனும் கிளம்பிடினோ, இழிமொழி புகன்றிட எவரேனும் துணிகுவரேல், முழக்கம் எழுப்புவர்:

ஈட்டியாற் சிரங்களை வீட்டிட எழுமின்!
நீட்டிய வேல்களை நேரிருந்து எறிமின்!
வாளுடை முனையினும் வயந்திகழ் சூலினும்
ஆளுடைக் கால்கள் அடியினும்
தேர்களின் உருளையி னிடையினும்
மாற்றவர் தலைகள் உருளையிற் கண்டு
நெஞ்சு உவப்புற வம்மின்!

என்று அழைப்பு விடுப்பர்; அடலேறுகள் அணி திரண் டெழுவர், போரிட, வாகை சூடிட!

"காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி,
வேங்கை நாடும், கங்கை பாடியும்
தடிகை பாடியும், நுளம்ப பாடியும்
குடமலை நாடும், கொல்லமும், கலிங்கமும்,
முரண்தொழில் சிங்களர் ஈழ மண்டலமும்,
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமும் கொண்டு"

வெற்றிப் பெருவீரனாக, இராஜேந்திர சோழன் விளங்கினான் என்பது வரலாறு.

□

## 2
# சிலப்பதிகாரம்

பூம்புகார், மதுரை மாநகர் இரண்டிலேயும், மாந்தர் வாழ்க்கை, சிறப்பாக மகளிர் வாழ்க்கை இருந்த விதத்தைப் படம் பிடித்துக் காட்டும் பான்மையிலே தந்தவர் துறவி, இளங்கோ அடிகள்.

மலரணி கொண்டை மாதர்க்கு அழகு!

இளங்கோ அடிகள், மதுரை மகளிர், மலரணிந்து மகிழ்ந்திருந்தனர் என்று மட்டுமல்ல, மலர்கள் பல வண்ணங் களாக உள்ளன அல்லவா? அவற்றினை ஒன்றாகத் தொடுத்து, அணிந்தவர் என்பதையும் கூறுகிறார்.

மலர், மணம் தருகிறது! எனவே, மாதர் தம் கூந்த லுக்குச் சேருகிறது.

ஆனால், இது, கலை அழகும் பெறுகிறது, கலை அழகு உணர்வு மிகுந்தவர் மதுரை மகளிர், என்பதைக் காட்டுகிறது. அவர்கள் முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழுநீர்ப்பூ முதலியவற்றினைத் தொடுத்து அணிந்து கொண்டனர், என்று அடிகளார் கூறும்போது.

அந்த மலர்களையும், மதுரை மகளிர், முத்தாரங் களுடன் தொடுத்து அணிந்திருந்தனராம். பாண்டி நாடு முத்துடைதது அல்லவா!

செல்வம், சீர், கலை உணர்வு, வாழ்க்கையை வெறுத் திடாத தன்மை, இவ்வளவும் விளங்கும் வகையில், மதுரை மகளிர், முல்லை, குவளை, நெய்தல், மல்லிகை, செங்கழு நீர்ப்பூ முதலியவற்றை முத்தாரங்களுடன் தொடுத்து அணிந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

வாழ்க்கை இவ்விதம் இருத்தல்தான் முறை; மதுரை மகளிர் இப்படி இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதனை, அடிகள், எப்போது காட்டுகிறார்? கண்ணகி, கணவன் அன்பைத திரும்பவும் பெற்றுப் புது வாழ்வு தொடங்கப் பொருள் தேட முயலும் நோக்குடன் கோவலனுடன் வருகிறபோது!

மதுரை, மகளிர், முத்தாரமும் மலரும் தொடுத்து அணிந்துள்ளனர்; வணிகக் கோமான் மகள், கண்ணகி இதனினும் மேலாக, அணிபணி பூண்டு வாழ்ந்திடலாம்.

ஆனால், காற்சிலம்பு விற்றால்தான், கைப் பொருள் கிடைக்கும் என்ற நிலை!!

என்றாலும், மகிழ்ந்து இருக்கும் மதுரை மகளிரைக் கண்டபோது, புது வாழ்வு கிடைக்கும்; அப்போது, இது போல...! என்ற எண்ணம் கண்ணகிக்கும் தோன்றியிருக்குமோ, என்னவோ!

காலத்துக்கு ஏற்றபடி, தம்மை அழகு படுத்திக்கொள்வது, நுண்ணிய கலை உணர்வைக் காட்டுவதாகும். காலத்துக்கு ஏற்ப, ஊர், கோலம் கொள்கிறது—இயற்கை அப்படிக் கோலத்தை மாற்றிக் காட்டுகிறது. அந்தக் கோலத்துக்கு ஒத்ததுபோல ஆடை அணி புனைவது, கலை அழகினை நன்கு உணர்ந்தால் மட்டுமே முடியும்.

அத்தகைய கலை உணர்வு மதுரைமகளிருக்கு இருந்திருக்கிறது என்பது வாடைக்காலத்துக்கு ஏற்ப அரத்தப் பூம்பட்டையை, மகளிர் அணிந்திருந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து தெரிகிறது.

பூம்புகார் நகரத்துப் பெண்கள் பகலில்பட்டு ஆடையும், இரவில் பருத்தி ஆடையும் உடுத்தினராம். ஆரணங்குகள் மட்டுமல்ல; ஆடவரும், அணிபணி பூண்டு, தம்மை அழகு படுத்திக் கொண்டனர். வெள்ளி நாரால் தொடுக்கப்பட்ட பொற்குவளை மலர்களை, ஆடிடும் விறலியர் அணிவராம்.

வெள்ளியால் நார்! பொற்குவளை!—வண்ணங்களை அடுக்கி அழகு பெறும் கலைத்திறனை, கலையால் கவர்ச்சி யூட்டும் விறலியர் பெற்றிருப்பது மிகப்பொருத்தமல்லவா?

ஆடவரோ, கடகம் கழல் எனும் அணிகள் பூண்டிருந் தனர். அவை ,செல்வத்தைக் காட்டுவன மட்டுமல்ல; வீர வெற்றிகள் பெற்றவர் என்பதையும் காட்டுவன.

கொள்ளழல் புரிந்த தாமரை
வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே.

—புற நா: 11

எரியகைந் தன்ன வேடி தாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணிய.

—பொருந: 156-62

(வேடி-சிவந்த (பொன், அழகிய); பித்தை-கூந்தல்; பாடினி-பாடுபவள்)

அணிவன, சூடுவன, என்பதில் மட்டுமல்ல, பூசுவன வற்றிலே, பல பொருள், பல முறைகள் இருந்திருக்கின்றன.

மாதவி, தன் கூந்தலைப் பத்து வகைப்பட்ட துவர், ஐந்து வகைப்பட்ட விரை, முப்பத்து இரண்டு வகை ஓமாலி கைகள் முதலியன ஊறின நல்ல நீராலே கழுவி, வாசனைப் புகையூட்டி கஸ்தூரி, சவ்வாது கலந்த தைலத்தைத் தடவி அழகு படுத்திக்கொண்டாள், என்று சிலப்பதிகாரம் செப்பு கிறது.

இப்படியெல்லாம் செய்து, கோவலனை மயக்கினாள்— என்று கூறுவர், நுனிப்புல் மேய்வோர்.

எண்ணிப் பார்த்து வியப்படைய வேண்டியது அஃது அல்ல. இவ்வளவு இன்பமாகச் செல்வமாகக் கலை அழகு உணர்வுடன், காட்சிப் பொருளாக வளர்ந்த அந்த ஆடலழகி, கோவலன் தன்னைத் துறந்தான், பின்னர் வெட்டுண்டு இறந்தான் என்றவுடன், என்ன ஆனாள்? எல்லாம் துறந்தாள்!! அவ்வளவு அழகூட்டும் முறைகளும், அவனுக்காக; அவனை மகிழ்விக்க! அவன் இல்லை! அவை இனி ஏன்? என்று துறந்தாள்.

ஆடலழகியரும் விறலியரும் அழகளிக்கப் பலமுறை தேடிக் கொள்வதிலே வியப்பென்ன? அது பொதுமுறையாமோ? என்று சிலர் ஐயப்படுவர்.

அலத்தகம் எனும் செம்பஞ்சுக் குழம்பை, கால், உள்ளங்கை, இதழ், நெற்றி, நகம்—இங்கெல்லாம் பூசி இலக்கணையார் மண அறைக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்டார் என்று சிந்தாமணியில் காண்கிறோம்.

காலவேறுபாட்டினைக் கவனித்துப் பெண்கள், மலர் சூடுவர் என்பதும், கூறப்பட்டிருக்கிறது.

**மாதவியின் ஒப்பனை :**

பத்துத் துவரினும் ஐந்து விரையினும்
முப்பத் திருவகை யோமா லிகையானும்
ஊறின நன்னீர் வுரைத்த நெய்வாசம்
நாறிருங் கூந்தல் நலம்பெற ஆட்டிப்
புகையில் புலர்த்திய பூமென் கூந்தலை
வகைதொறு மான்மதக் கொழுஞ்சே றூட்டி

—சிலப்: கடலாடு காதை: 76-81

[துவர்-பூசுவன, விரை-கலவைச் சாந்து; ஓமாலிகை-மணம் உள்ள நீரில் இடும் பொருள்; மான்மதம்-கஸ்தூரிக் குழம்பு.]

அம்மலர் அடியுங் கையும் அணிகிளர் பவழவாயும்
செம்மலர் நுதலும் நாவும் திருந்தொளி உகிரோ(டு)
அங்கேழ்
விம்மிதப் பட்டு வீழ அலத்தகம் எழுதி இட்டாள்
அம்மலர்க் கண்ட முள்ளிட் டரிவையைத் தெரிவை
தானே.

—இலக்கணையாரிலம்பகம்: 69

[நுதல்-நெற்றி; உகிர்-நகம்; அலத்தகம்-செம்பஞ்சுக் குழம்பு.]

முன்பனிக் காலத்தில், மகளிர், தம் கூந்தலில் மல்லிகை யையும், அதன் அருகே வாகையையும் சூடிக் கொள்வராம்.

இளவேனிற் காலத்திலோவெனில், கழுநீர் மாலை யாம், குவளை மலராம்!!

இவ்விதமாகவெல்லாம் இல்லறத்திலே, வாழ்க்கைக் கலையழகுடன், வாழ்ந்து வந்தவர் தமிழர், முன்பு!!

□

# 3

# புறநானூறு

## தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

**கை** கொட்டிச் சிரித்தனர், தலைக்கனம் கொண்டவர்கள்.

கரியும் பரியும் மந்தை மந்தையாக உள்ளன. தேர்ப் படையும் காலாட் படையும் பெரிதும் உடையோம், எமது வீரத்தின் எதிர் நிற்பார் எவர் உளர் என்று இறுமாந்து பேசினர்.

அவன் இளையவன், எது செய வல்லான்—என்று உளையக் கூறினர்—இளைஞனாக இருந்த தமிழ்க் காவலனை —பேரரசர்கள்.

இளைஞன்தான்—எனினும் ஏச்சும் பேச்சும் கேட்டாக வேண்டுங் கொல்!

படையின் தொகை மிகுதியாக இல்லாதிருக்கலாம். ஆயின் அதனைக் காட்டி என் வீரத்தைப் பழிக்கப்போமோ?

பேரரசராயின் ஆகுக. அதுபற்றி அவர் சிற்றரசர் தமைச் சீரழிவாகப் பேசுதல் முறையோ,—என்றெல்லாம் இளஞ்சிய மன்னனான அத்தமிழன் எண்ணினான்.

உள்ளம் வெதும்பிற்று. அது வீரத்தைக் கருக்கி விடவில்லை—வீரம் கொழுந்து விட்டெரிந்தது. வஞ்சினம் கூறினான்.

நாவடக்கமற்று எனை இழித்தோரை எதிர்த்து அறிவு புகட்டுவேன். களத்திலே அவருடன் போரிட்டு, அவர்தம் முரசு பறிப்பேன்.

அங்ஙனம் யான் செய்யாதொழியின், கொடுங்கோலன் என்ற வசையைத் தாங்கித் தாழ்வுறுவோனாகக் கடவேன். புலவர் பாடிடத் தகுதி பெறாத நாட்டுக்குரியோன் என்ற இழிநிலை பெற்றவனாகக் கடவேன். இரப்போருக்கு ஈந்திடும் நிலையையும் இழந்தவன் என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்கானவன் ஆகக் கடவேனாக — என்றெல்லாம் வஞ்சினன் கூறினன்.

நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளையன் இவனென உளையக் கூறிப்
படுமணி இரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யாமென்று
உறுதுப்பு அஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
என்று.

சினங்கெழு வேந்தர், சிறுசொற் கூறினர். வஞ்சினம் கூறினன் வேந்தன்; இளையன்!! யாது கூறினன்?

அருஞ்சமம் சிதையத் தாக்கின் முரசமொடு
ஒருங்கு அகப்பட்டே(எ)ன் ஆயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர் பரப்பி
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா இன்மையா னுறவே!

—புறநானூறு : 72

இது அந்த வீர மன்னன் கூறிய வஞ்சினம்.

இழித்தும் பழித்தும் பேசிடும் அரசர்தம் முரசு பறிப் பேன்—அஃது நான் செய்யாது போயின், கொடுங்கோலன் என்று இகழட்டும் என்னை, புலவர் பெருமக்கள் என் நாட்டைச் சிறப்பித்துப் பாடாது இருக்கும் இழிவைப் பெறு வேனாக!

இளையோன், பெரும் படையற்றோன், என்று கூறி நகைத்தோர் செயல்கண்டு வஞ்சினம் கூறினன் ஓர் தமிழ் மன்னன்—வீரன்—இளைஞன்—என்பதையும்-அவன்—வஞ்சினம் —கூறியதற்கொப்பச் செருவென்றனன், போரில் வெற்றி பெற்றனன் என்பதை மட்டுமே, மாந்தரை நிறையுடை யோர் ஆக்கத்தக்க தமிழ் இலக்கியத்தில் குறையறிவு மட் டுமே கொண்ட நான் உனக்கு எடுத்துக்காட்ட முடியும்!

வஞ்சினம் கூறினன் முரசு பறிப்பேன் என்று.

பகை முடித்தனன் களத்தில் நின்று — அன்று — தமிழ். மன்னன்.

வஞ்சினம் கூறிச் செருவென்ற அம்மன்னன் யார்?

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்.

**புறநானூற்று காட்சி :**

தித்தன் எனும் தன் தந்தையிடம், மனவேறுபாடு கொண்ட கோப்பெருநற்கிள்ளி எனும் மன்னர்மகன் பற்றிய செய்யுளொன்று புறநானூற்றில் உள்ளது.

தந்தையும் மகனும் வேறாயினர்—கோப்பெருநற்கிள்ளி யிடம் தந்தை தொடர்பு கொள்ளாது தனித்திருந்தனன்.

கோப்பெருநற்கிள்ளி கட்டிளங்காளை, போரில் வல் லான். அவன் ஒரு சமயம், முக்காவல் நாட்டு ஆமூர் எனும் இடத்தே, மல்லன் ஒருவனைப் போரில் வென்றான்! அத னைப் பாராட்டி, சாத்தந்தையார் எனும் புலவர் பெரு மகனார் பாடியது, தேனாய் இனிக்கிறது.

மற்போரினைக் கண்டு களித்தார் அப்புலவர். மல்லன் வலிவு மிக்கவன்; கோப்பெருநற்கிள்ளியின் மார்பின் மீது உட்கார்ந்து கொண்டு அழுத்துகிறான்; கிள்ளி அந்த அழுத்தத்தை அகற்ற, மல்லனுடைய தலையையும் காலையும் வளைத்திழுத்து ஒடித்துத் தோற்கடித்தான், பசி மிகுந்த யானை, மூங்கிலைப் பற்றி இழுத்து ஒடிக்குமே, அது போலிருந்ததாம், கிள்ளியின் மற்போர் வகை, அதைப் பாராட்டிய புலவர்,

நல்கினும் நல்கானாயினும்

'காண விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்'

வெல்போர்ப்போர் அருந் தித்தன் காண்க!

போரில் வெல்லும் திறன் படைத்தவனும், எதிர்ப்பாரற்ற வலிவுடையோனுமாகிய, கிள்ளியின் தந்தையாம் தித்தன் காண்பானாக! என்று பாடுகிறார்.

தந்தையும் மகனும் மன வேறுபாடு கொண்டவர்தாம்—ஆயினென்!

தத்தனும் கிள்ளியும் வேறு வேறு இடத்திலேதான் வாழ்கின்றனர். எனினும், மகனுடைய மற்போர் வெற்றியைக் காண்பதன்றோ, தந்தைக்குக் கிடைத்தற்கரிய பேறு! எனவே, கிள்ளியின் வெற்றியைத் தந்தை காண வேண்டும்—அவருக்குக் காட்சி களிப்பளிப்பினும், அளித்திடாது போயினும், கவலையில்லை, கண்டால் போதும் என்கிறார் சாத்தந்தையார்!

இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்
மைந்துடை மல்லன் மதவலி முருக்கி
ஒருகால் மார்பொதுங் கின்றே;ஒருகால்
வருதார் தாங்கிப் பின்ஒதுங் கின்றே
நல்கினும் நல்கான் ஆயினும் வெல் போர்ப்
போரருத் தித்தன் காண்கதில் அம்ம

பசித்துப்பணை முயலும் யானை போல
இருதலை ஒசிய ஏற்றிக்
களம்புகும் மல்லன் கடந்தடு நிலையே—

—புறநானூறு: 80

ஆமூரில் வலிமைமிக்க மல்லனின் ஆற்றலை அடக்கி, அவன் மார்பில் ஒருகாலை ஊன்றி, மற்றொரு, காலால் அவன் எதிர்ப்புக்களை விலக்கி, பச்சை மூங்கிலை வளைத்து ஒடித்துத் தின்ன முயலும் யானையைப்போல, அம்மால்லன் காலும் தலையும் முறிய அவனைக் கொன்று வெற்றிமாலை புனையும் இவனை (போர்வைப் கோப்பெருநற் கிள்ளியை) போர் வெல்லும் திறமை மிக்க தித்தன் என்னும் இவன் தந்தை, மகிழ்ந்தாலும் மகிழாவிட்டாலும் காண்பானாக.

(மைந்து-வலிவு; முருக்கி-கெடுத்து;போர்அரும்-போரில் மிக்க; பணை-மூங்கில்; இருதலை-தலையும் காலும் ஒசிய-முறிய)

□

## 4
# நெடுநல்வாடை

### பாசறையில் நெடுஞ்செழியனின் பாங்கு!

பாசறையில், தூக்கம் வரவில்லை, பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு. களத்திலே, களிறுகளின் துதிக்கைகளை வெட்டி வீழ்த்தி, கடும் போரிட்டுக் களைத்துக் கிடக்கின்றனர் வீரர்கள்!

வாடைக் காற்று அடித்துக் கொண்டிருக்கிறது.

விளக்கின் சுடர்கள், வாடை காரணமாகத் தென் திசையாகச் சாய்ந்து காட்டுகின்றன!

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் தோளின் மீதுள்ள ஆடை நழுவுவதை, இடப்பக்கத்தில் இறுக்கிப் பிடித்தபடி, பாசறைப் பகுதியில், விழுப்புண் பெற்றுப் படுத்துக் கிடக்கும் வீரர்களைச் சென்று பார்க்கிறான்.

வேம்பு அணிந்த வேந்தன், தன் கொற்றத்தின் ஏற்றத்தைக் குறைத்திடத் துணிந்த மாற்றாரின் கொட்டத்தை அழித்திட, களம் புகுந்து கடும் போரிட்டு, விழுப்புண் பெற்று வீரராய்த் திகழ்ந்திட இத்துணை ஆற்றலர்கள் உள்ளனர் என்பதைக் காண்பதால் போலும், முகமலர்ச்சியுடன் காணப்படுகிறான்!

இது மன்னன் நிலை—பாசறையில்.

## பிரிவு

அழகான அரண்மனை! அந்தப்புரம்! படுக்கை அறை!

யானையின் கொம்பினால் வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட கட்டில், தந்தக் கட்டில்தானே, என்று கருதிவிடக் கூடாது, நக்கீரர் வெகுண்டெழுவார்! அந்தக் கட்டில், செல்வ நிலையை மட்டும் காட்டுவது அல்ல.

போரிலே ஈடுபட்டு இறந்துபட்ட, யானையின் கொம்புகள்! நாற்பது வயதானதாக இருக்குமாம், யானை!

முத்தாலே சாளரங்கள்! புலி வடிவமும், பூவேலைப் பாடுமுடைய திரைகள்! முல்லையும் பிற மலர்களும் அன்னத்தின் தூவியும் தூவப்பட்ட படுக்கை!

அதிலே, படுத்திருக்கும்போது, துயில் வரவில்லை!

அவள் அடியினை, அழகு மகளிர், மெல்ல வருடுகிறார்கள், துயில் கொள்ளட்டும், என்று; பயன் இல்லை!

தலைவன் இல்லை, துயிலும் இல்லை.

தலைவன் இல்லாததால், துயில் மட்டுமா இல்லை! மார்பிலே முத்து மாலைகள் இல்லை! கரங்களிலே பொன் மணி வளைகள் இல்லை; சங்கு வளையல்களே உள்ளன! நூற்புடைவைதான்—அதிலும் மாசு நிரம்ப! அணிபணி அகற்றிவிட்டு, பிரிவாற்றாமையால், பெருந்துயர் உற்று, கண்களிலே துளிர்த்திடும் நீர்த்துளியைத் தன் கை விரலாற் போக்கி, கலங்கித் தவிக்கிறாள், அரசி.

தந்தக் கட்டிலில் படுத்துத் துயில் கொள்ளாது துயரம் மிகுந்து, தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த அரசியைப் பிரிந்துதான், பாண்டியன் நெடுஞ்செழியன் பாசறையில் உலவிக் கொண்டிருக்கிறான்.

‘நெடுநல்வாடை’ காட்டும் பாடம், மறக்கப் போமோ!!

களம் செல்வதெனின், காதலையும் மறந்திடும் ஆற்றல் கொண்டவர், தமிழர்.

காதலின்பம் பற்றிய கருத்தற்றவரோ, மனை மாண்பு அறியாதாரோ, எனின், அகம் கேலி செய்யும், அதற்கென்றே ஓர் களஞ்சியமாக நிற்கிறேன், அறிவிலிகாள்! ஏன் உமக்கு அர்த்தமற்ற ஐயப்பாடு என்று கேட்கும்.

வறிய நிலத்திலே, உள்ளது நெரிஞ்சி. சிறிய இலைகள் கொண்டது; கண்ணுக்கினிய பூக்கள் கொண்டது. பூ உதிர்ந்ததும், காய் காய்க்கும், அது முள்ளாகிக் காலில் குத்தும்.

நெரிஞ்சியோ, புதுமலர் தருகிறது. கண்ணுக்கு இனிமை கிடைக்கிறது.

அதே நெரிஞ்சியே முள்ளும் உதிர்க்கிறது, காலில் தைக்கிறது.

இதனை எடுத்துக் காட்டி, என் காதலர் எனக்கு இனியது செய்தும் மகிழ்விக்கிறார்; அவரே பிறகு இன்னலை விளைவிக்கிறார் எனைப் பிரியும் போது; நெரிஞ்சிபோல!!— என்று பிரிவுத்துயரை விளக்கிடத் தமிழணங்குக்குத்தான் தெரிகிறது!

நோம்என் நெஞ்சே!
நோம்என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற
சிறிஇலை நெரிஞ்சி
கட்குஇன், புதுமலர்,
முள்பயந்து ஆங்கு
இனிய செய்த நம் காதலர்
இன்னா செய்தல், நோம்என் நெஞ்சே!

கண்ணுக்கு இனிமை தரும் புதுமலர் கிடைப்பதும் நெரிஞ்சியில்!—முள் பாய்ந்து குத்துவதும் நெரிஞ்சியால்! என்று இயற்கை உவமையைக் காட்டி தன் உள்ளத்து நிலையை விளக்கிடும் தமிழணங்கு காண்கிறோம்.

இத்துணை அளவுக்குப் பிரிவாற்றாமை ஏற்படுகிறது, என்பது அறிந்துத்தான் களம் சென்றனர்—உரிமை காத்திட, மரபு வாழ்ந்திட!

களம் செல்லாக்காலை, எத்துணை கவர்ச்சி கண்டனர் காதலில்!!

கார் காலம் கண்டான் தலைவன்! மயில் ஆடுகிறது! முல்லை மலருகிறது! உடனே, தலைவியின் நினைவு வந்து குடைகிறது. மேகத்தைவிட விரைந்து வருகிறான்; காதலியிடம் கூறுகிறான்.

மயிலைக் கண்டேன், உன்னைப் போலவே இருந்தது!

முல்லை மலர்ந்திருக்கக் கண்டேன்—உன்னை எண்ணினேன்!

ஒளி பொருந்திய நெற்றியை உடைய அரிவையே! விரைந்து வந்தேன்!—என்று காதல் பொங்கிக் கவிதை வடிவாகிறது!

நின்னே போலும்
மஞ்ஞை!

என்று ‘ஐங்குறு நூறு’ அழகாகக் கவிதை அளிக்கிறது.

காதலில் இத்துணை ஈடுபாடும், அதன் மாண்பினிலே சிறந்த பற்றும் கொண்டோரெனினும், நாடு காத்திடப் போர் எழுந்ததெனின், நள்ளிரவிலும், தூக்கம் வாராமல், பாசறையில், பணியாற்றினர் தமிழர்.

# 5

# முல்லைப் பாட்டு

**மா**ணிக்க விளக்கு ஒளி தருகிறது.

புலிச்சங்கிலியிட்டுச் செய்த இருக்கையில், படுத்திருக்கிறான் மன்னன்.

காவலாளிகள், சுற்றித் திரிந்தபடி உள்ளனர்; மாற்றாரிடமோ, உற்றாரிடமோ, நடப்பனவற்றை உளறிக் கொட்ட முடியாத நிலையினர்; ஊமையர்.

விளக்குகள் அணையும்போது, பந்தத்தைக் கொளுத்தி விளக்குகளை எரியச் செய்கிறார்கள் கச்சையணிந்த மங்கையர்.

கச்சையணிந்த மங்கையர்தானே, என்று கெடுமதியாளர் எண்ணிடத் துணிய முடியாது—அம்மங்கையர்வாள் அணிந்துள்ளனர்.

மெய்காப்பாளர்களும் காவலிருக்கின்றனர்.

காலத்தைக் கணக்கிட்டு, 'நாழிகை' கூறி நின்றனர், சிலர்.

இருக்கையில் உள்ளான் மன்னன்—நடுநிசிக்குப் பிறகும் உறக்கம் கொள்ளவில்லை! பள்ளி அறை அல்லவே! பாசறை! அடர்ந்த காட்டினை அழித்து, அமைக்கப்பட்ட பாசறை! அங்கு உலவிய கொடிய மிருகங்களையும், கொடியோரையும், அழித்தும், அகற்றியும், முள்வேலி அமைத்துக் காவலாக்கிய நிலையில் உள்ள பாசறை!

உறக்கம் கொள்ளாதது ஏன்? கடும்போர் நடந்திருக்கிறது! அதிலே படுகாயமுற்றனர், தன் படையினர்! அதனை எண்ணி, வெற்றி பெற்று, தன் கொற்றத்தின் சிறப்பினை நிலைநாட்டிட, அவ்வீரர், பட்ட கஷ்டங்களை எண்ணி, உள்ளம் உருகுகிறான் மன்னன்!

போர்வீரர்கள் குறித்து மட்டுமல்ல, பகைவரின் தாக்குதலால் புண்பட்ட, கரி, பரி குறித்தும் கவலை யுறுகிறான்! ஒரு கரம் படுக்கையில்! மற்றோர் கரம் கொண்டு கண்களைத் தடவிக் கொண்டுள்ளான் மன்னன்!

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் அளித்துள்ள முல்லைப்பாட்டு, பாசறையில் இருந்த மன்னனைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

வீரத்தையும், வீழ்ந்துபடாக் கொற்றத்தையும் தமிழர் பெற்றிருந்த காலை, பாசறையின் நிலைமை!

## பாரி பறித்த பறி :

மழையால் நனைந்து வந்த ஔவைப் பெருமாட்டிக்கு ''எந்தையும் இழந்தோம், எம்குன்றும் பிறர் கொண்டார்'' என்று கூறிட வேண்டிய நிலை பெற்று நலிந்து நின்ற பாரி மகளிர், ஒரு நீலச் சிற்றாடை தந்தனராமே, அதுபோது, மூதாட்டி அம்மகளிரின் மாண்பு கண்டு நெஞ்சு நெக்குருகி,

> பாரி பறித்த பறியும், பழயனூர்க்
> காரி கொடுத்த களைக்கொட்டும்—சேரமான்
> வாராய் என்றழைத்த சொல்லும்இம் மூன்றும்
> நீலச்சிற் றாடைக்கு நேர்!

என்று பாடினதாகக் கூறுகிறார்கள்.

பரிசு தந்தான் பாரி. பெற்ற மூதாட்டியார், புறப்பட்டார், போக. பாரிக்கு, பிரிந்து நிற்க, மனமில்லை. மூதாட்டியைச் சொல்லால் தடுத்திட இயலாது என்று எண்ணினான். எனவே, தன் ஆட்கள் சிலரை அனுப்பினா

னாம், எதற்கு? தான் முனமுவந்து தந்துத பரிசுகளை வழி ,யில் பறித்துக் கொண்டு வந்து விடுவதற்காக.

ஔவை அறியார், பாரியின் இந்தப் போர் முறையை.

வழிப்பறி கள்வர் செயல் இது, என்று எண்ணம் கொண்டார், பொருள் பறிக்கப்பட்டபோது.

பொருள் பறிபோயிற்றே என்பதைவிட, பாரி ஆட்சி நடத்திடும் இக்காலையிலா, கள்வர் இத்துணை துணிவுடன் உள்ளனர்; அந்தோ! அஃது அவர் ஆட்சிக்கே யன்றோ இழுக்கு, என்பதை எண்ணி மூதாட்டியார் பெரிதும் மனம் வாடினராம்.

நாட்டிலே இத்தகு கொடுஞ்செயல் நடை பெறுகின்றது என்பதை எடுத்துக்கூறச் சென்றார்—ஔவையார் வந்தார், தமிழுக்கு வாழ்வளிக்கும் பெருமாட்டி என்பதைக் கண்ட பாரி, களிப்புற்று, பிறகே, நடந்ததன் உட்பொருளை எடுத்துரைத்தானாம்.

□

# 6
# பட்டினப்பாலை

கடலிலே கிடக்கிறது, காவிரிப்பூம்பட்டினம். எனினும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் தந்துள்ள பட்டினப்பாலையில், அந்நகர் அழியாது நின்று தன் அழகை எடுத்தளிக்கிறது, இதோ சோழ நாடு!

மாரி பொய்ப்பினும் தான் பொய்யாத பொன்னி ஓடுகிறது.

கழனிகளில் விளைச்சல் அமோகமாக!

கழனிகளில், கரும்பை அடும் ஆலைக் கொட்டில்கள் உள்ளன; ஆதலால் அந்த நெருப்பினால் ஆம்பல் பூக்கள் கருகி விடுகின்றன.

நெற் கதிர்களைத் தின்று தெவிட்டிப் போன நிலையில் எருமைக் கன்றுகள் துயிலுகின்றன!

கதிர்களை, அவை தின்று தீர்த்ததால், குறை வந்துற்றதோ என்றால்,அதுதான் இல்லை! நெற்கூடுகளின் நிழலிலே தான், எருமைக் கன்றுகள் துயில் கொள்ளுகின்றன!

தெங்கு, வாழை, கமுகு, மஞ்சள், மா ,பலா, இஞ்சி இவை, எங்கும்!

நெல்லை உலர்த்தி இருக்கிறார்கள் வீட்டு வாசலில்.

கோழிகள் தின்ன வருகின்றன.

அந்தக் கோழிகளை, மகளிர் பொற்குழைகளைக் கழற்றி எறிந்து விரட்டுகிறார்களாம்!

இந்த வளம் உள்ளது சோழ நாடு!

இனி, காவிரிப்பூம்பட்டினம் காணப் போவோம்.

உப்பு விற்று விட்டு அதற்கு ஈடாக, நெல் கொண்டு வந்த படகுகள் வரிசையாகக் கட்டி நிற்க வைக்கப் பட்டுள்ளன.

சோலைகள், பொய்கைகள், ஏரிகள்!
மதில் சூழ்ந்த நகரம்!
மதிலின் வாயிலில் இரட்டைக் கதவுகள்!
மதிலிலே, புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருக்கிறது.
சோறிடும் சாலைகள் ஏராளம்!

அங்கு வடித்த கஞ்சி, ஆறென ஓட, அதிலே ஏறுகள் புகுந்து சண்டையிட, சேறாகி, பிறகு உலர்ந்து, புழுதியா கிறதாம்!

கடல்வழி வந்த குதிரைகள்
நிலவழி வந்த மிளகுப் பொதிகள்
இமயச் சாரலின் மணியும், பொன்னும்,
குடகு மலைச் சந்தனமும், அகிலும்,
தென்கடல் முத்து
கீழ்க்கடல் பவளம்
ஈழ நாட்டுப் பொருள்
காழக நாட்டுப் பொருள்

இவைகளெல்லாம் மலைமலையாகக் குவிக்கப்பட்டிருந்தன; ஒவ்வோர் நாளும் விழாக்கோலமாம்! ஆடலும், பாடலும் அழகியதாய் அமைந்திருந்தனவாம்! கடலடி சென்று விட்டது காவிரிப்பூம்பட்டினம், கவிதை வடிவில் உள்ளது இன்றும்!

வளம், தமிழகமெங்கணுமே கொழித்திருந்தது, நன்கு தெரியத் தக்க கவிதைகள் இருந்து கொண்டு நம்மை இன்று, வேதனைக்கும், வெட்கும் நிலைக்கும் தள்ளியபடி உள்ளன! தமிழில் என்ன உண்டு என்றெண்ணிடும் பெருமதியெனும் பெற்றோமா! இல்லையே! தமிழின் இனிமையும், தொன்மையும், உள்ளத்தைத் தொட்டுத் தொட்டு அவ்வப்போது நம்மைத் தமிழனாக்கிவிடுகின்றன!

□

# 7
# மலைப்படுகடாம்

பெருங்குன்றூர்ப் பெரும்புலவரொருவர் பாடியுள்ள மலைபடுகடாம், நம்மை, படாத பாடு படுத்துகிறது!

இனி மலை படுகடாம் காட்டிடும் வளம் காண்போம்.

மழை, வேண்டியபோது பொழிந்து வளமளிக்கிறது. எல்லாம் செழித்து வளருகின்றன!

விண்ணகத்து நட்சத்திரங்கள் உதிர்ந்து கீழே சிதறிக் கிடப்பது போல, கொல்லைகளிலே, முசுண்டைக் கொடியின் பூக்கள் உள்ளன.

எள்ளு, எத்துணை வளமாக இருக்கிறது என்கிறார், புலவர்! ஒரு கைப்பிடியில் ஏழே காய்கள் தான் அடங்குமாம்! தொட்டதும் நெய் மணம்.

தினைக்கதிர்களைக் காண்கிறார்—கண்டதும் யானைக் கன்றுகள், விளையாடும் போது, துதிக்கைகளை ஒன்றோடொன்று பிணைந்து கொண்டு நிற்பது நினைவிற்கு வருகிறது; அவ்விதம் உள்ளதாம், தினைக்கதிர்கள்.

அவரைப் பூக்கள் சிதறி இருப்பது, தயிர்க் கட்டிகள் வீழ்ந்து கிடப்பதுபோல் இருக்கிறதாம்!

□

# 8

# குறிஞ்சிக் காட்சி

**கா**னவன் யானைமீது வீசிய கவண்கல் வேங்கையின் பூவைச் சிதறி, ஆசினிமென் பழத்தை உதிர்த்து, தேனின் இறாலைத் துளைப்படுத்தி, மாவின் குலையை உழக்கி, வாழையின் மடலைக் கிழித்து, பலாவின் பழத்துட்சென்று தங்கும்.

குறிஞ்சிக் காட்சியினைக் கூறுகிறார், புலவர்.

காடுகளையும் கானாறுகளையும், ஓடைகளையும் அவைதமில் துள்ளும் மீன்களையும், குவளையையும் தாழை யையும், யானையையும் பெடையையும், செங்கால் நாரை யையும் கருங் குயிலையும், கடுவனையும் மந்தியையும், உதிர்ந்த பூக்களையும் உலர்ந்த தருக்களையும், பாய்ந் தோடும் அருவிகளையும் பட்டுப் போன மொட்டுக்களையும், காணும்போதெல்லாம் அவர்கட்குக் கருத்து ஊற்றெடுத் திருக்கிறது, அத்துணைக் கருத்தும், உண்மையோடு ஒட்டிய வையாக, கேட்போர் மறுக்கொணாவகையினதாக, கேட்டு இன்புறத்தக்கதாக அமைகின்றன. இந்தச் சிறப்பு புலவர் தேடித் தந்தது;

கானவன் கவண் வீசுகிறான் துவக்கத்திலேயே, புலவர் கானவனைக் கவண் வீசச் சொல்கிறார், ஏனெனில் வீச வேண்டிய முறைப்படி அதற்கேற்ற பயிற்சி பெற்ற நிலை யிலுள்ளவன் வீசினாலல்லவா, கவண்கல் செய்ய வேண்டிய தைச் செம்மையுறச் செய்யும்.

தாக்க வந்தவனை, ஆட்டுக் குட்டியைத் தூக்கி எறி வதுபோல எறிந்தான்—என்ற கருத்தை அளிக்க முற்பட்டால்

மல்லன் என்ற சொல்லைக் கோத்தாக வேண்டுமல்லவா, ஏனெனில் மல்லன் செய்யக்கூடிய காரியமல்லவா, அது; அது போலத்தான், யானைமீது வீசவேண்டும் கல்லினை—எனவே புலவர், கானவனைத்தான் காட்டுகிறார்.

கானவன், கவண்கல் வீசுகிறான் யானைமீது!

எனவே யானை சாகவில்லை, மிரண்டோடி விட்டது; வீசப்பட்ட கல்லோ வேங்கை மரத்தின் மீது உராய்ந்து செல்கிறது. வேகமாகச் செல்வதால், பூத்துக் கிடக்கும் பூ சிதறுகிறது. கல் சென்று கொண்டிருக்கிறது, ஆசினிப் பழத்தை உதிர்க்கிறது, தேன் அடை துளைக்கப்படுகிறது, மாவின் குலை தாக்கப்படுகிறது, வாழை மடலைக் கிழிக்கிறது, இறுதியாகப் பலாப் பழத்துட் சென்று தங்கி விடுகிறது.

வீசப்பட்ட கல்லின் வேகம், படிப்படியாகக் குறையும், வேகம் குறையக் குறைய, அதன் செயல் படும் வலிவும் குறையும் என்ற உண்மையை, யானை மீது வீசப்பட்ட கல், வேங்கை மரத்துப் பூக்களைச் சிதறச் செய்து, ஆசினிப் பழத்தை உதிரச் செய்து, தேன் அடையைத் துளைத்து, வாழை மடலைக் கிழித்து, இறுதியில் பலாவிடம் அடைக்கலம் புகுந்து விடுவதாகக் கூறி விளக்கும் அழகினைப்பார். யானை மீதே கல் பட்டிருந்தால், கல் பிறகு யானை மீது மோதுண்ட காரணத்தால், மேலால் செல்லாது, கீழே 'தடும்' என விழும்; பிறகு வேங்கையும், ஆசினியும், மாவும், பிறவும், புலவர்தம் பாவினிலே வரத்தேவை ஏற்பட்டிராது.

வேங்கையின் மலர், ஆசினிப் பழம் இவற்றினைச் சிதறவும் விழவும் செய்தாரே தவிர, இதற்குள் கல்லின் வேகம் குறைந்து போயிருக்கும் என்ற இயற்கை உண்மையை உணர்ந்தவராதலால், மாங்குலையின் மீது கல் பட்டபோது, உலுக்கி விடும் அளவுக்கு, பிறகு வேகத்தால் கிடைக்கும் வலிவு கல்லுக்குக் குறைந்து விடுவதால், வாழை மடலைக் கிழித்திட மட்டுமே இயலுமாகையால், அதனை மட்டும் கூறி, வேங்கை உயரத்துக்கு வேகமாக மேலெழும்பிய கவண்

கல், பிறகு ஆசினி, மா, வாழை என்ற அளவுக்குக் கீழே இறங்கி, கடைசியில் பலாவில் சென்று தங்குகிறது—பழம், எனவே, கல் புக முடிந்தது, பலாப்பழம் எனவே அதற்குள் ளேயே ஒட்டிக் கொண்டது என்கிறார் புலவர். இவ்வளவு இயற்கையோடிணைந்ததாகக் கவிதை தருகிறார்; செய்யுட் சுவையுடன் கூடவே செந்தமிழ் நாட்டு வளம் தெரிந்திடச் செய்கிறார்.

யானை உலவும் காடுகள்; அங்குத் துணிவுடன் உலவும் கானவர்; அவர்கள் கவண் வீசும் திறம்; ஓங்கி வளர்ந்த வேங்கை மரம்; கனி தரும் மாவும் வாழையும் பலாவும், கானகத்தில்! இவ்வளவு வளம் தமிழகத்தில்; குறிஞ்சி மட்டுமல்ல, எந்த நிலம் பற்றிப் பாடினாலும், இதே முறை —உண்மையை அழகு பட உரைத்திடுவது; இல்லை, உண் மையை உரைக்கிறார்; அதிலே அழகு தவழ்ந்து வருகிறது!

□

# 9
# நிலமடந்தை

நிலந்தனிலே உழுதிடுவோர், சேறாக்க மிதித்திடுவார், செய்தொழிலுக்கேற்ற வண்ணம், வெட்டியும் குத்திக்குடைந்தும், பிளந்தும், குழி பறித்தும், எத்தனையோ செய்திருப்பது, காண்கின்றாய், அல்லவா? எதன் பொருட்டு? பலன் காண! எவர் துய்க்க அந்தப் பலன்? நிலம் அல்ல!

பலன் காண மக்கள் உழைத்திடுதல் காண்போர் உழைப்போரை வாழ்த்துகின்றார், உழைப்பின் ஏற்றம் செப்புகின்றார்; உண்மை; தேவை.

ஆயின், வேறொன்று உணர்தல் வேண்டும். பலன் காண உழைக்கின்றான் மனிதன், அவன் காணும் பலன் வழங்கும் நிலமோ பலன் காணாதது மட்டுமல்ல, தன்வலிவு தானிழந்து, பொருளிழந்து போவதுடன், வெட்டுவார் நிற்பதையும் வெறுத்திடாமல், அவர்க்கும் இடம் அளித்திடும் பொறை உண்டே, அம்மம்ம! மிகப் பெரிது!!

என் சோறு உண்டவனா என் சொல்லை மீறுவது? நான் அளிக்கும் ஊதியத்தால் உயிர் பிழைக்கும் போக்கினனா, நாக்கை நீட்டி நின்றான், நானவனுக்கு உயிர் கொடுத்தோன் என்பதனையும் மறந்து? என் வீடு ஏறி நின்று என்னையே ஏசிட, என்னதான் துணிவு உனக்கு? இறங்கு என் இடம் விட்டு என்றெல்லாம் ஊரார் உரையாடல் கேட்கின்றோம். பொன்னுடன் மணியும், பொன்னுடையானேனும் இஃது இல்லாதானாயின், என்னுடையான் என்று எவரும் கூறிடத்தக்க, உண்ணும் பொருள் பலவும், சுவைதரும் கனியதுவும், மணம்தரும் மலர் தானும்,

தந்ததுவும் நிலமதுதான், ஒரு பலனும் காணாதது மட்டு மல்ல, கருவி கரம் கொண்டு தன்னைஇம்சிப்போனின் தாள் தங்கி இருப்பதற்கு இடம் கொடுக்கும், இயல்பு என்னே! சின்னஞ்சிறு பூச்சி, நமதுடலில் ஓரிடத்தில் ஊர்ந்து நமக்குத் தொல்லை தந்திடும்போதினிலே, எவ்விதம் துடிக்கின்றோம், எவ்விதம் தேடுகின்றோம், கண்டெடுத்துப் பூச்சியினைக் கொன்றொழிக்கத் துடிதுடித்து, எத்தனை விதமாகத் தாக்குகிறார், நிலமதனை. எத்துணை பொறுமையுடன் எல்லாம் தாங்கிக் கொண்டு பலன் தந்துதவுகிறது நிலம் என்னும் நேர்மை. உழுதால் உணவளித்து, குடைந்தால் நீரளித்து, ஆழக் குடைந்திட்டால், அரும் பொருள்கள் பல அளித்து, ஏனென்று கேளாமல், எப்பலனும் பெற்றிடாமல் ஈந்திட நான் உள்ளேன் பெற்றிடுவாய்! பிழைத்திடுவாய்! எத்தனை விதமான இன்னலும் இழிவும், நீ என்மீது சுமத் திடினும், எல்லாம் மறந்திடுவேன், பல்பொருளைத் தர மறப்பேன் அல்லேன்! குத்தியவன் குடைந்தவன், வெட்டிய வன் இவனன்றோ, இவன் நிற்க இடம் கொடுக்க ஏன் நாம் ஒப்புதல் வேண்டும். பழி தீர்த்துக் கொள்வோம், இவன் நம்மைப் படுத்திய பாடுகளுக்கெல்லாம், என்ற சிறுமதி துளியுமின்றிச் செல்வம் ஈந்திடுவது காண்கின்றோம்.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

என்றார் வள்ளுவர். பொறையுடைமையில் இஃது தலை யாயது என்று கூறுகிறார்.

நிலன்தரும் பலன்கண்டு மகிழ்ந்து, நன்றி கூறும் இந் நாள், பொறையுடைமையைப் போற்றிடவும் வேண்டும்,

உன் எதிரே காணப்படும் விளைபொருள் யாவும், விதையாக ஒரு போது இருந்தவை. நிலம் தன்னிடம் ஒப் படைக்கப்பட்டிருந்ததனை, எத்துணை பாங்காக வளரச் செய்து நமக்கு அளித்துளது ! தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட 'விதை' கவரப்படாமலும், அழிக்கப்பட்டு விடாமலும் பாதுகாப்பு அளித்து, பிறகு முளைவிட்டபோது, வெளியே

சென்றிட இடமளித்து, தான் பெற்ற குழந்தையை உலவ இடம் கொடுத்து, அதேபோது பாதுகாப்புக்காகத் தன் ஆடையால், குழவியை ஒரு குறிப்பிட்ட அளவு இடம் வரையில் மட்டுமே உலவிடத்தக்க விதமாகப் பிணைத்து வைக்கும் தாய்போல, செடியும் கொடியும் பயிரும் தன்னுள் இருந்து வெளிக்கிளம்பிட இடமளித்து, அதேபோது, வேர்களை இறுக்கிப் பிடித்துக் கொள்வதன் மூலம், நெடுவழியும் கெடுவழியும் போய்விடாதபடியும் தடுத்து வைத்திருக்கிறது.

இத்தனை பரிவு வழங்கும் நிலத்தைத்தான், பல்வேறு பொருள்களைப் பெற்றுப் பயன் துய்க்கும் மாந்தர், பெயர்க்கிறார்கள், பிளக்கிறார்கள், குடைகிறார்கள், அகழ்வாரை நிலம் தாங்கிக் கொள்கிறது.

என்னென்ன உதவிகள் செய்தேன் தெரியுமா இன்னாருக்கு என்று கூறிடத் தோன்றும் போதெல்லாம், நிலம் மாந்தர்க்கு வழங்கிடும் உதவியின் தன்மையை எண்ணி, அடக்க உணர்ச்சி பெற வேண்டும். நிலம் மாந்தர்க்கு வழங்கும் திறத்துடன் மாந்தர் ஒருவர்க்கொருவர் கொடுத்துக் கொள்ளும் உதவிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமக்கே வெட்கமாக இருக்கும்.

என்னிடம் உதவி பெற்றுக் கொண்டு என்னையே இகழ்கிறான்—நான் எப்படி அதனைத் தாங்கிக் கொள்வேன் என்ற எண்ணம் எழும்போதெல்லாம், நாம் அகழ்வாரைத் தாங்கிக் கொள்ளும் நிலத்தை எண்ணிப் பொறையுடைமையைப் பூண்டிடல் வேண்டும்.

□

# 10
# கலிங்கத்துப் பரணி

ஓசை கேட்டாலே, விசை ஒடிந்த தேகத்திலும் வீரம் வந்து சேரும்! கூறட்டுமா.....

விடவிகள் மொடுமொடு விசைபட
முறிபட எறிபட நெறிபடவே!
அடவிகள் பொடிபட, அருவிகள்
அனல்பட, அருவரை துகள்படவே.

ஓசை கேட்கும்போதே, பெரும் படையொன்று எதிர்ப் பட்டதனைத்தையும் அழித்தொழித்தபடி, பாய்ந்து செல்வது, தெரிகிறதல்லவா?

மொடுமொடுவென்று, மரங்கள் முறிந்து விழுகின்றன, படைகள் பாய்ந்து வருவதால், அடவிகள் பொடிபடுகின்றன; மலைகள் தூளாகின்றன, அருவிகள் நெருப்பாறாகின்றன.

இது கல்ங்கப்படை! தமிழ் மறவரின் படையினைத் தடுத்து நிறுத்தப் பாய்ந்து வருகிறது. ஆனால் தமிழரின் பெரும்படையோ, தமிழகத்தைக் கடந்து கலிங்கம் செல்கிறது. படையுடன் செல்வோம்—பாடல் படித்தேனும்!

பாலாறு, குசைத்தலை, பொன் முகரிப்
பழ ஆறு, படர்ந்து எழு கொல்லி எனும்
நாலாறும் அகன்று ஒரு பெண்ணை எனும்
நதி ஆறு கடந்து நடந்து, உடனே

வயலாறு புகுந்து, மணிப்புனல் வாய்
மண்ணாறு, வளம் கெழு குன்றி எனும்
பெயலாறு, பரந்து நிறைந்து வரும்
பேர் ஆறும் இழிந்து; அது பிற்படவே

கோதாவரி நதி, மேலாறொடு குளிர்
பம்பா நதியொடு சந்தப் பேர்
ஓதாவரு நதி ஒரு கோதுமையுடன்
ஒலி நீர் மலிதுறை பிற காக.

இப்படி, தமிழர் பெரும்படை, ஆறு பல கடந்து, அடவி பல நடந்து, கலிங்கப் படையைத் தாக்குகிறது. சோளத்தட்டுகள் போன்றாருடன் அல்ல, போர், மற்றார், வீரமே புலியுடன் புலி போரிடுவது போல! மலையுடன் மலை மலை மோதுதல் போல!!! அந்தப் போரிலே,

குருதியின் நதிவெளி பரக்கவே
குடை இனம் நுரை என மிதக்கவே
கரி துணிபடும் உடல் அடுக்கியே
கரை என இருபுடை கிடக்கவே

இரத்த வெள்ளம்—ஆறு போல! வீழ்ந்த வெண் குடைகள் மிதக்கின்றன, நுரைபோல! ஆறு கரை புரண் டோடாது தடுத்தது என்னையோவெனின் வெட்டுண்ட யானைகளின் உடலங்கள் கரைபோல அமைந்து விட்டன—அதனால்!!

இத்தகைய பெரும்போரில், தமிழர் வெற்றியினைப் பெற்றனர்—கலிங்கத்துப்பரணி, அந்தச் சிறப்பினைச் செப்புகிறது.

போர்க்களக் காட்சியை எடுத்துக் காட்டும்போது, ஜெயங் கொண்டார் (பரணி பாடவேண்டிய முறைப்படி) பிணக் குவியலைத் தேடி, உண்டு களித்து நடமிடப் பேய்கள் வருவது பற்றி, வேடிக்கையாகப் பாடி இருக்கிறார்.

கலிங்கப் போர் நடக்கிறது; இரத்தம் ஆறென ஓடுகிறது. பிணங்கள் வீழ்ந்து கிடக்கின்றன, மலை மலையாக! ஓடி வாருங்கள்! வயிறு புடைக்கத் தின்னலாம்! — என்று பேய்களைக் கூவிக் கூவி அழைக்கிறதாம் வேறோர் பேய்!

குறுகிய வடிவம் கொண்ட பேய்! கொழுப்பு மாலை அணிந்த பேய்! கோடரிப் பல்லழகி! கொட்டாவி விட்டபடி உள்ள பேய்!—இப்படிப் பேய்கள் பல வகை. எல்லாவற்றுக் கும் நல்ல வேட்டை அல்லவா, சுவையான விருந்தல்லவா?

ஜெயங்கொண்டார் பரணியில்,
குறுமோடி!
நெடு நிணமா லாய்!
குடை கல தீ!
கூர் எயிறி!
நீலி!
மறிமாடி!
குதிர் வயிறீ!
கூழட வாரீர்! கூழட வாரீர்!

என்றுரைக்கிறது.

கூழட வாரீர்! கூழட வாரீர்!—என்று பெரிய பேய், மற்றப் பேய்களை அழைக்கிறது. கூழட வாரீர்! என்றால், சமைக்கலாம், வாருங்கள் என்று பொருள், களம் நிறையப் பிணங்கள்! விருந்து உண்ணலாம், சமைக்க வாருங்கள்— கூழட வாரீர்!— என்று கூவி அழைக்கிறது பெரும் பேய். எவரெவரை?

குட்டைப் பேய்!
நெட்டைப் பேய்!
கொழுப்பு மாலை அணிந்த பேய்!
இரத்த வெள்ளத்தில் குளிக்கும் பேய்!
கூரிய பற்களை உடைய பேய்!

நீலிக்கண்ணீர் விடும் பேய்!
ஆடு விழுங்கும் பேய்!
குதிர் போன்ற வயிறு உள்ள பேய்!

இப்படி உள்ளன பேய்கள்!

பறிந்த மருப்பின் வெண் கோலால்
பல்லை விளக்கிக் கொள்வீரே!
மறிந்த களிற்றின் பழு எலும்பை
வாங்கி நாக்கை வழியீரே!

பேய்கள் என்றால், அவைகளுக்கு மட்டும், சுத்தம் வேண்டாமா? பல் விளக்க வேண்டும்! நாக்கிலே ஒட்டிக் கொண்டுள்ள பசையை வழித்தெடுத்து விட வேண்டும்! பிறகுதானே, விருந்து சுவைக்கும்! யானைத் தந்தம் பல் விளக்க! விலா எலும்பு நாக்கு வழிக்க!

□

## 11
# பூங்காவில் புலவர்

பூங்கா உலவிடவும் ஏழைப் புலவர்க்கு நேரம் உண்டோ? என்பாரும், கண்டிடப் பூங்கா எங்குளது? எனக் கேட்டாரும், உளர்; உணர்கிறேன். நான் கூறும் புலவர், தமிழகமே பூங்காவாக இருந்த காலத்தவர், புகழ் ஈட்டி வாழ்ந்தவர், அறநெறி அறிவித்து அரசர்களை நல்வழிப் படுத்திடும் உரிமை பெற்றவர், உயர்வு பெற்றவர்.

தமிழகமே ஓர் பூங்காவாகத் திகழ்ந்த நாட்களை ஏடு களில் காண்கின்றோம். இட நெருக்கடி, தொழில் நெருக் கடி, மக்கட் பெருக்கம், வறுமை ஆதிக்கம் அற்ற நாட் களுக்கு அழைக்கிறேன்—காண—எண்ணிப் பார்த்திட. எழி லார் பொழில் நிரம்பிய இந்நாடு இனிய மணம் பரப்பிவந்த நாட்கள்! அருவிகளின் அரவணைப்பிலே பொழில்கள் வளம் பெற்ற நாட்கள்! அன்னமும் மயிலும் அழகு நடை பயிலக் கண்டு, ஆரணங்குகள் கன்னத்தில் கை வைத்து வியந்த நாட்கள்! வானம்பாடியின் இசைகேட்டு இன்புற நேரமும் நினைப்பும் கொண்ட நிலையில் மக்கள் இருந்த நாட்கள். உழவும் தொழிலும் வாழ்க்கைக்குப் போதுமான வளம் அளித்து, வறியர்என்பார் இங்கு இலர் என்ற நிலை இருந்த நாட்கள். தமிழகம், தமிழகமாக இருந்த நாட்கள். தமிழ் மொழியினின்றும் தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் பிரிந்து, அம்மொழி பேசுவோர், தமிழகத்தில் ஓர் பகுதியை ஆந்திர மென்றும், கருநாடகமென்றும், கேரளம் என்றும் பெயரிட்டழைத்துத் தனி அரசு முறைகளைமேற்கொள்ளாத நாட்கள்! வடபுலத்தவர் வல்லமையாலோ வஞ்சகத்தாலோ

தென் புலத்தை அடிமைப்படுத்த முடியாத நிலையிருந்த நாட்கள்! அந்த நாட்களிலே தமிழகமே ஓர் பூங்கா!

புவியாள்வோரும் புரவலர்களும், புலவர்களுக்கு ஏதேனும் ஈந்தால் மட்டுமே தமது கரம் மணம் பெறும் என்று எண்ணியிருந்தனர். புலவர்களும் பொன்னைப் பொருளைத் தேடிட முனையாது, தமிழ் இனிமையை எவரும் நுகர்ந்திடச் செய்யும் தொண்டினிலே முனைந்து நின்றனர்.

புலவர்கட்கு, புவியாள்வோர் அவையிலும் புரவலர் மாடங்களிலும் உலவி மகிழ்ந்திடுவதைக் காட்டிலும் மலையும் மலைசூழ் இடமும், காடும் காடடுத்த இடமும், கடலும் கடலோரமும், பூங்காவும் புனலாடுமிடமும் இங்கெல்லாம் சென்று உலவுவதில், கண்டு மகிழ்வதில், இயற்கையின் எழிலை வியந்து நிற்பதில்தான் அதிகமான விழைவு இருந்திருக்கிறது என்பது அவர்கள் நமக்குக் கருவூலமென விட்டுச் சென்ற கவிதைகளின் மூலம் விளக்கமாகத் தெரிகிறது.

தாம் கூற வேண்டிய எண்ணங்களை, ஏற்பாடுகளை, நிலைகளை, பொருளை, விளக்குவதற்காகப் புலவர் பெருமக்கள், உவமை கூறுவது மரபு. பொருட்செறிவு மிக்க உவமைகளைப் புலவர்கள் தந்துள்ளனர். பூ மணக்கும் இடம், புகழ் மணக்க வாழ்ந்த புலவர்கட்கு, பெருமகிழ்வு பெறத்தக்க இடமாக மட்டுமல்ல, தமது கவிதைகட்குச் சுவை சேர்த்திடத்தக்க கருத்தளிக்கும் இடமாக இருந்திருக்கிறது.

இதோ ஒரு புலவர்—உடன் செல்வோம். தந்தாலன்றி தாமாகப் பொருள் ஏதும் தரச் சொல்லிக் கேளார், தயக்கமின்றி உடன் செல்லலாம்.

கண்களிலே களிப்பொளி! ஏன் இராது! கவிதைக்கு மக்களிடம் நல்ல மதிப்பு! மன்னன், இவர் வருகைக்குக் காத்திருக்கும் அளவுக்கு, இவர்க்குச் செல்வாக்கு. இயற்கையின் கோலத்தைக் காண்கிறார் பேருவகை அடைகிறார்.

அதோ தாமரை! அழகு மலர்! புலவர்களின் பாமாலையை நிரம்பப் பெற்ற மலர்!! அதைத்தான் பார்க்கிறார் புலவர்.

அழகு தாமரையே
அணியே பணியே

என்று பாடத் தொடங்குவார், இவரல்ல, இற்றை நாள் கவிவாணர்கள். இவர் தாமரையையும் பார்க்கிறார், அதன் அருகே உள்ள பகன்றைப் பூவையும் பார்க்கிறார் அந்தப் பூ தாழ்ந்து காணப்படுகிறது; தாமரையை நோக்கி.

சரி! இது தாமரை! அது பகன்றை! இரு வேறு மலர்கள், ஆனால் அருகருகே! அவ்வளவுதான், நமக்கு தெரிகிறது, புலவர்க்கு அப்படி அல்ல.

தாமரை! பகன்றை! இரு மலர்கள்—பக்கத்துக்குப் பக்கம்; தாமரைக்கு அருகே, நெருங்கிச் செல்லும் நிலையில் அல்லவா, பகன்றைப் பூ இருக்கிறது! என்ன நேர்த்தி! என்ன அழகு!!

தாமரை, வெளிர் கலந்த செந்நிறமுடையது!

பகன்றைப் பூ வெள்ளை நிறமுடையது.

தாமரையின் அருகே, நெருங்கி, தாழ்ந்து நிற்கிறது பகன்றை! காண்கிறார், கவிதை சுரக்கிறது! ஏன்? தாமரையின் அருகே பகன்றைப் பூ, தாழ்ந்து நெருங்கிக் காணப்படுவதின் வனப்பு விளங்கத்தக்க விதமாக மக்களுக்கு எடுத்துக் கூறிட வேண்டும் என்று புலவருக்குத் தோன்றுகிறது.

தாமரைக்கருகே பகன்றை! ஆலுக்குப் பக்கம் வேல்! இப்படிப் பல உள. நிரம்ப உள. புலவர் ர் இதனை மட்டும் ஏன் குறிப்பாகக் கவனிக்கிறார்?

புலவர்கள், மலர் கண்டால் பாடிடுவது மரபு என்று கொண்டிடினும், இரு மலர்களைக் கண்டதால், இரண்டு கவிதைகள் இயற்றட்டும்—தாமரைக்கு ஒன்று—பகன்றைக்கு மற்றொன்று! அவ்வளவுதானே! ஏன் இப்புலவர், இந்த இரு மலர்களையும், இவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறார்? காணக்காண இவர் முகமே மலராகி விடுகிறதே, ஏன்? கேட் போமா?

''புலவரே! தாமரை பகன்றை எனும் இரு மலர்களையும் நெடு நேரமாகப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே! ஏன்?''

''இளைஞனே! அந்த அழகினைக் கவனித்தனையா?''

''தாமரை, அழகு மலர்!''

''பகன்றையும்தான்! மலரே அழகு வடிவங்கள்! இயற்கை மாந்தர்க்குத் தரும் அன்பளிப்புகளல்லவா! தாமரையும் கண்டிருக்கிறாய், பகன்றைப் பூவையும் பார்த் திருக்கிறாய்—ஆனால், இரு மலர்கள் மட்டுந்தானா உன் கண்களுக்குத் தெரிகின்றன?''

''ஏன்! இலைகள்கூடத் தெரிகின்றன.''

''அட, அனுபவமற்ற வாலிபனே! இலை தெரிகிறதா, கொடி தெரிகிறதா என்றா கேட்கிறேன். ஒரு மங்கையின் முகம் தெரியவில்லையா, உனக்கு?''

''செந்தாமரை முகத்தாள் என்பார்களே, அதைச் சொல்கிறீர்களா?''

''நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. செந்தாமரை முகத்தழகி என்று அழைத்து மகிழ்ந்திட வாய்ப்பற்ற வறியவன் நீ. கிடக்கட்டும்! செந்தாமரையைக் கண்டதும், எழில் மங்கையின் முகம் தெரியும். தெரிகிறது. உற்றுப்பார்! வேறு என்ன தெரிகிறது?''

''எங்கே? எதைக் கேட்கிறீர்கள். ஓ அந்தப் பூவையா? அது, பகன்றை. அதுவும் தான் தெரிகிறது.''

''தெரியாமலென்ன? கண் இருக்கிறதே! கருத்துக் கனியவில்லை உனக்கு. கேள்—தாமரையைக் காணும்போது அழகு முகம் தெரிகிறது. அதுபோல, பகன்றைப் பூவைப் பார்க்கும் போது என்ன தெரிகிறது?''

''பகன்றைப் பூ, தெரிகிறது!''

''பரவாயில்லை! அதாவது தெரிகிறதே! மதியிலி! மதியிலி!! உற்றுப்பார்! பகன்றை, தாமரையை நெருங்கி, தாழ்ந்து இருக்கிறது. வெண்ணிறக் கோப்பை போலத் தெரிகிறதா? பார்!''

''ஆமாம்! வெள்ளை நிறம்! கோப்பை போலத்தான் தெரிகிறது.''

''தாமரை மலரினை!''

''அழகிய மங்கையின் முகத்தருகே, வெண்ணிறக் கோப்பை! நான் காணும் காட்சி என்ன என்கிறாய், வெண்ணிறக் கோப்பையில் தேன் பெய்திருக்கிறது. தாமரையாள், பருகப் போகிறாள், கோப்பை, நெருங்கித் தாழ்ந்து இருக்கிறது.''

''ஆமாம்...ஒரு இள மங்கை ஏந்திடும் வெண்ணிறக் குவளை போலத்தான் காட்சி இருக்கிறது.''

புலவர் இதுபோலவா ஒவ்வொருவரிடமும் கூறிட இயலும்? கண்ட காட்சி கிளறிய கருத்தினைக் கவிதை வடிவாக்கித் தருகிறார்.

அகன்துறை அணிபெறப்
புதலொடு தாழ்ந்த
பகன்றைப் பூவுற நீண்ட
பாசடைத் தாமரை
கண்பொர ஒளிவிட்ட
வெள்ளிய வள்ளத்தால்
தண்கமழ் நறுந்தேறல்
உண்பவள் முகம்போல!
வண்பிணி தளைவிடும்.

அந்தத் தமிழகம் இன்று இல்லை! அந்தத் தமரையும் பகன்றையும் என்றோ போய் விட்டன. புலவரும் புகழுடல் பெற்றார். ஆனால் கவிதை இருக்கிறது, தமிழ் உள்ள மட்டும் நமக்கு அந்தக் காட்சியைக் காட்டிட!!

செந்நெல் வயலினிலே உள்ள செழுமை எத்தகையது எனில், ஆங்கு தாமரையே பூத்திருக்கிறது!!

கதிர் முற்றி விட்டது. காற்றால், மணிகள் உதிர்க்கப் படுகின்றன! கீழேயே செந்நெல் மணிகள் உதிர்கின்றன? செந்நெல் மணி என்ன அவ்வளவு சாமான்யதா? தாமரை மலரிலே விழுகிறது!

நினைவிலே கொண்டு வந்தால் நேர்த்தி விளங்கும்.

தாமரை மலர், விரிந்து இருக்கிறது! அதன் இதழில், செந்நெல் மணி வீழ்ந்திருக்றது! செந்நெல் மணியின் நிறம்? பொன் நிறம்! என்ன தெரிகிறது கண்ணுக்கு? தாமரை!

அதன்மீது செந்நெல்!! அவ்வளவு தானே? அவ்வளவுதான் நமக்குத் தெரியும். புலவர் காண்பது என்ன தெரியுமோ?

ஓர் ஆடலழகி! அவள் நெற்றியிலே வயந்தகம் எனும் அணி பூட்டப்பட்டிருக்கிறது.

கொடி அசைகிறது, தாமரை ஆடுகிறது! ஆடலழகியைக் காண்கிறார்.

செந்நெல் சிதறி வீழ்ந்திருக்கிறது, மலரில்! பொன் நிறம்! ஆடலழகியின் நுதலில் வயந்தகம் சூட்டப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது, புலவருக்கு.

புகழ் அரங்கின்மேல்
ஆடுவாள் அணு நுதல்
வகைபெறச் செருகிய
வயந்தகம் போல் தோன்றும்.

மலர்களைக் காண்பதும், களிப்படைவதுமேகூட, இன்று, நாம் மேற்கொள்ள முடியாத, பழக்கமற்றுப் போன காரிய மாகி விட்டது. மலர்வகைக் கண்டு, அழகினை நுகர்வோர் மிகச் சிலரே! அதுகுறித்துப் பாடிடுவோர் அதிகம் இலர்! பாடிடினும், அந்நாள் வாழ்ந்த செந்நாப் புலவர்போல கருத்தமைந்த உவமை நயத்துடன், அக்காட்சிகளை என் றென்றும் நாம் காணத் தக்க விதத்தில் கவிதை வடிவம் தரத்தக்கவர் எவருமிலர்.

நெய்தல் மலர் காண்கிறார், புலவர். நெய்தல், நீல நிறம்!

புன்னை காற்றால் உதிர்ந்து விழுகிறது; வேறெங்கும் விழவில்லை, நீலநிறமுள்ள நெய்தல் மலரிலில் விழுகிறது

புன்னை பொன்நிறம்! நெய்தல், நீல நிறம்! அழகாகத் தானே இருக்கும். ஆம்! புலவர் அருமையையும் அதிலே காண்கிறார், இரு மலர்கள்! வெவ்வேறு வண்ணம் என்ற அழகு மட்டுமல்ல அவர் காட்டுவது.

நீலமணியினால், இழைக்கப்பட்ட பேழையில், பொன் வைத்திருப்பது போலத் தெரிகிறது புலவருக்கு. கவிதை பிறக்கிறது.

புன்னை நுண் தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியின் பொறப்பத்தோன்றும்.

கவிதையைப் படிக்கும்போது அன்று புலவர் கண்ட அருங்காட்சியே தெரிவது போலல்லவா இருக்கிறது! அத் துணை அருமைமிகு படப்பிடிப்பு, அந்நாள் புலவர் தம் பாக்கள்.

முசுண்டை எனும் பெயிருடையப்பூ, வெண்ணிறம் கொண்டது. இரவுக் காலத்திலேதான் முசுண்டை பூத் திடும். மலையோரத்தில் காணப்படுவது.

நட்ட நடுநிசியில் வானில் தோன்றும் நட்சத்திரங்கள் என்றார் புலவர், இந்தப் பூக்களை!

தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையினை முசுண்டை
வெண் பூக்குழைய
வானெனப் பூத்த பாணாள் கங்குல்

வானத்தில் தோன்றி மறைகிறதல்லவா வானவில். அதனைப் புலவர் வாவியிலே காண்கிறார்! ஆனால் வானவில் மேலே இல்லை!! வாவியில் மட்டும் இருக்கிறது. வானவில்

அரக்குச் சிகப்பு வண்ணம், நீலம் முதலிய பல வண்ணங்கள் கொண்டதல்லவா? அவ்வளவும் தெரிகிறது, குளத்தில், எங்ஙனம்? குளத்திலே, நீல மலர் பூத்திருக்கிறது! குவளை மலரும் இருக்கிறது! வானவில் போல் தோன்றாதா!

அகலிரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப
அரக்கிதழ்க் குவளை யொடு நீலம் நீடி.

இருப்பதைக் காட்டுகிறார்.

கோமகள் கோபம் கொண்டிருந்தால், பணிப்பெண் என்ன செய்வாள்? குழைந்து கும்பிட்டு, கோமகள் எதிரே நிற்பாளல்லவா? பிழை பொறுத்திடுக! பெருமாட்டி! இனி ஓர் முறை பிழை புரியேன்!! என்று இறைஞ்சி நிற்பால்லவா பாளல்லவா? அதைக் காண்கிறார், புலவர்! எங்கு? குளத்தில்!!

தாமரை காண்கிறார்! பக்கத்தில் ஆம்பல் பூத்திருக்கிறது. காற்று அடிக்கிறது; ஆம்பல், தாமரை இருக்கும் பக்கமாக வளைந்து காணப்படுகிறது. தாமரை கோமகள்! ஆம்பல், பணிப்பெண்! காற்று, கோபம்! வளைந்து காணப்படுவது, இறைஞ்சி நிற்பது! தவறா!!

ஆமாம்! அப்படித்தான் இருக்கிறது, தாமரையின் பக்கம் ஆம்பல் வளைந்து நிற்கக்காணும்போது, என்று கூறத்தான் தோன்றுகிறது. எப்போது? வாவியிலே ஆம்பலையும் தாமரையையும் பார்க்கும் போதா? இல்லை! அப்போது ஏழுவில்லையே மனதிலே அந்த அழகோவியம், சுவை சேர் உவமை! கவிதையைப் படிக்கும் போதல்லவா, காட்சி பளிச்செனத் தெரிகிறது.

சுடர்த்தொடிக் கோமகள்
சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கை
தொழுதா அங்கு
உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும்.

மாதரின் முகத்தினை, செந்தாமரைக்கு ஒப்பிட்டுக் காட்டு தல் கவி மரபு. அதனைப் புலவர்கள் நிரம்பச் செய்திருக் கிறார்கள். ஆனால் தமிழ்ப் புலவர்கள், மாதரின் மன நிலைக்கு ஏற்ப முகத்தின் ஒளியும் வண்ணமும் மாறித் தோற்றமளிக்கும் என்பதனை மறவாமல், அந்நிலையின் போது, முகம் உள்ளவிதத்தைக் காட்டிட அதற்கு ஏற்ற மலரை உவமையாக்கிப் பாடியுள்ளனர்.

தலைவியைப் பிரிந்ததால் தலைவியின் முகம் வெளுத் தல்லவா காணப்படும். வெளுத்திருக்குமேயொழிய, அழகு அறவே அற்றுப் போயிருக்கும் என்று எண்ணக் கூடாது. மகிழ்ச்சியுடன் உள்ளபோது முகம் செந்தாமரையாக இருக் கும்; பிரிவாற்றாமையினால் முகம் வெளுத்திருப்பினும், அந் நிலையிலும், முகம் வேறோர் மலர்போல் இருக்கிறதே யன்றி, வனப்பே அற்றுப் போன நிலையில் இல்லை.

பிரிவாற்றாமையின்போது, மாதரின் முகம் பீர்க்கு மலர் போன்றிருக்குமாம்; வெளுத்துப் போய் காணப்படும்.

புலவர்கள் பூங்காவினில் உலவிக், உவகை கொண்ட துடன், என்றென்றும் படித்து இன்புறத் தக்க, இயற்கை யோடு ஒட்டிய உவமை நயமிகு நல்ல கவிதைகளை இயற்றி அளித்துள்ளனர்.

நிலைகெட்ட இந்நாளிலேயும், இஞ்சியும் மஞ்சளும் இன்ன பிறவும் மாவுடன் பலாவும் வாழையும் தெங்கும், கொடியிற் கிடைப்பனவும் கொத்தி எடுப்பனவுமான, பல் வேறு பண்டங்களைத் தமிழகம் தரத்தான் செய்கிறது. பொங்கற் புதுநாளன்று நமது இல்லங்களில் காணப்படும் மலரும் கனியும், தமிழகம் இன்றும் தன் மக்களுக்குத் தரும் அன்பளிப்புகள்.

புலவர் கண்ட பூங்கா கண்டு வியந்து பாராட்டியது போன்றே, தமிழகம் கண்ட பிற நாட்டவர், நமதரும் நாட்டினையே பூங்கா என்று புகன்றனர்.

புலவர்கள் பெண்களைப் பூவை என்று அழைத்திடுவது மரபு.

பூ போன்ற எழிலும் மணமும் கொண்டவர் மாதர் எனும் கருத்துடன் ஒரு சமயம், மாதர்களைப் பூவையர் என்று கூறினரோ என்று கூடத் தோன்றுகிறது. கண்களைக் குவளை மலருக்கும், நாசியை, எட்பூவுக்கும், காதினை வள்ளைப் பூவுக்கும், வாயினை முருக்கு இதழுக்கும், கை விரல்களைச் செங்காந்தள் பூவுக்கும் ஒப்பிட்டுக் காட்டிடும் புலவர்கள், மொத்தமாகவே மாதர்களை மலருக்கு நிகர் என்று கூறிடும் கருத்துடன், பூவையர் என்று கூறியிருந் திருப்பின், முற்றிலும் பொருத்தமுடைத்தே என்று கூறலாம்; தவறில்லை.

புலவர்கண்ட பூங்காவிலே சிறிதளவு உலவிடும்போதே, தமிழின் இனிமையை மட்டுமல்ல, தமிழகம் எத்துணை வளம் கொஞ்சும் நிலையிலே இருந்திருக்கிறது என்பதறிந்து மகிழ்ச்சி பெறுகிறோம்.

பொங்கற் புதுநாளன்று பல்வகைச் சுவைகளைப் பெற்று மகிழ்கின்றனர் — பெரும்பாலான இல்லங்களில். எல்லாச் சுவைகளையும் விட, பழந்தமிழக எழிலும் ஏற்ற மும் விளங்கிடத்தக்க, இன் கவிதைகளை ஓரளவேனும் படித்து இன்புறுவது, தக்கதோர் சுவை தருவதாக அமையும். தொழிலகத் தொல்லைகள், வயல்வெளி வாட்டங்கள், அங்காடி மூட்டி விடும் அல்லல்கள், அரசு ஏற்படுத்தி விட் டுள்ள சிக்கல்கள் இல்லங்களிலே புகுந்து குடையத்தான் செய்கின்றன—மறுத்திட இயலவில்லை. எனினும், தொல்லை நிரம்பிய இந்நிலையிலேயும் தொல்புகழ் பெற்று விளங்கிய திரு இடத்தவர் நாம் என்ற உணர்வும், அதன் இன்றைய நிலையினைத் திருத்தி அமைத்திடும் கடமை நம்முடையது என்பதனையும் நாம் அறிதல் வேண்டுமன்றோ. நமக்கு கடமை உணர்வு எழ, கவிதை காட்டும் தமிழகம் வழி அமைக்கும். புலவர் கண்ட பூங்காவும், அறவோர் கண்ட அரசும், உழவர் கண்ட வளமும், மக்கள் கண்ட வாழ்வும் நமது நினைவிற்குக் கொண்டு வரப்படுவதற்கு ஏற்ற நன் னாள், பொங்கற் புது நாள்.

கடித்துக் கடித்து சாறு உண்டு சுவைக்கிறானே, கரும்பு, அதனை, அவனிடம் தராமல், சாறு பெற வேறு முறையும் தேடாமல் விட்டு வைத்தால் என்னாகும்? சின் னாட்களிலே சாறு சுண்டிப்போய் விடும்—வெறும் சக்கை யாகி விடும்! பிறகோ, சுவைச் சாறும், அதனின்றும் சீனி சர்க்கரையும் தரத்தக்க கரும்பு, அடுப்புக்கு விறகாகும்.

அஃதேபோல, புலவர் கண்ட பூங்காவினிலே நுழைந்து வியந்து, புத்துணர்வு பெறுகிறோம் எனினும், அந்த உணர்

வினைத் தக்க முறையிலே பயன்படுத்தாது போயின், புல வருடன் பூங்கா சென்று வந்தது பொருளற்றதாகி விடும். வீண் வேலையாகிப் போகும். புத்துணர்வு பெற்றவர், தமிழகம் பூங்காவாகத் தக்க நிலை பெற வழி என்ன? முறை யாது? என்று சிந்தித்துச் செயலில் ஈடுபட வேண்டும்.

□

## 12

# பைங்கிளிக்குப் பாலூட்டும் செந்தாமரையாள்

செந்தாமரையன்ன முகமுடைய செல்வி, தன்னிடமுள்ள அஞ்சுகம் கொண்ட கோபத்தைப் போக்கவேண்டி, பசும்பாலை வட்டிலிலிட்டு, அதற்கு அளிக்கும் காட்சி—காண எங்ஙனம் இருக்கும்! எழில்மிகு காட்சியன்றோ அது. திறமை கொண்ட ஓவியர், அதனைத் தீட்டித் தருவரேல், கண்டு களி கொள்ளதாரும் இருக்க முடியுமா? ஆம்! ஆயினும், ஓவியமாக இருப்பின், காலத்தால் மங்கிக் கெட்டுவிடக் கூடும்; செந்தாமரையாகத்தான் முகத்தழகு தீட்டியிருப்பான் ஓவியன், ஆயினும், காலக்கரம் அந்தக் கோலத்தைக் கெடுத்து வெண்தாமரையாக்கி விடக்கூடும்! கிளி நிறம், மங்கி, அழகு குறைந்து தெரியக் கூடும்! ஓவியம், கண்ணைப் பறிக்கும், களிப்பினை அளிக்கும், ஆயினும் காலத்தின் தாக்குதலை எதிர்த்து நின்று, என்றும் இளமையுடன் இருந்திட இயலாதன்றோ!

ஆனால், அந்தக் காட்சி, கவிதை வடிவாக்கித் தரப்படின்? எழில் என்றென்றும் விளங்கும்! காலம், அதனைக் கலைத்துக் கெடுத்திடாது; காட்சியின் கவர்ச்சி துளியும் மங்காது.

வீரர்தம் வெற்றி, அதுகாண அவர் நடாத்திய போர் அப்போர் மூலக் காரணமாக அமைந்த பகை; இவை பற்றிய

கவிதைகளையும், மன்னன் மாண்பு, மக்கள் இயல்பு, செல் வச் சிறப்பு எனும் நிலைபற்றிய கவிதைகளையும், அறநெறி கூறிடும் அரும் செய்யுட்களையும் மட்டுமல்ல, துவக்கத்தில் குறிப்பிட்டது போன்ற, என்றும் மகிழ்ச்சி தரத்தக்க காட்சி களையும், கவிதை வடிவாக்கி வழங்கினர் தமிழ்ப் புலவோர், ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே!

மாடமாளிகைக்குள் சென்று மங்கை நல்லாளைக் கண்டு, அந்தச் செல்வக் குமரியை மகிழ்விக்கக் கொஞ்சு மொழி பேச வேண்டிய கிளி, கோபமுற்றிருக்கவும், அதற் காகக் கோபம் கொள்ளாமல், காரணம் கண்டறிந்து, அன் புடன் ,பால் தந்து, கிள்ளைக்குப் பரிவு காட்டும் பாங்கினை யும், புலவர் கண்டன்றோ, கவிதையை அளித்திருக்க வேண்டும்.

அவர், அதுபோன்ற இடம் சென்று அம்மாளிகைக்கு வெளியே இருக்கிறார், எனினும் அந்தக் காட்சியைக் காண் கிறார்!

தமிழகத்துக் கவிஞர்கள், தன்னிகரில்லா திறமை பெற் றவர்கள், எனவே எதனையும் காணாது கூடக் கருத்தால் புனைந்து காட்டுவர், என்று சொல்லத் தோன்றும். ஆயின், அஃது, அப்புலவர்களின் பெருமைக்கும் திறமைக்கும் ஈடு ஆகாது. எவரெவர்க்கோ உண்டு, காணாதக் காட்சிகளை யூகித்துக் காட்டும் திறன்.

இல்லது புனைதல், நல்லதோ கெட்டதோ அஃது புராணப் புலவர்களிடம் நிரம்ப இருந்தது. அதே திறனைக் காட்டித், தாம் எப்படி என்று அப் புலவோர் கேட்டிட வில்லை.

கண்டதைக் கவிதையாக்கிக் காட்டுவது தீது தான்—ஆயினும், காணாதரும், கவிதையைக் காணும்போது, அக்காட்சியைக் காண்பார் போலவே காட்டும், அஃதே கவிஞரின் சிறப்பினைக் காட்டும்.

இந்தச் சிறப்பு, நம் தமிழ்க் கவிஞர்களிடம் உள்ளது. அதுமட்டுமல்ல.

கண்டு கவிபாடுவதும் உண்டு; முன்பு கண்டதை மனதிலே கொண்டு கவிபாடுவதுமுண்டு.

ஒன்றைக் காணும்போது, அதற்கு ஒப்பாக வேறான்று முன்பு கண்டறிந்தது நினைவிற்கு வருதல் உண்டு; அந்த இரண்டினையும் காட்சியும் பயனும் மிகுந்திடும் முறையில் இணைத்து பார்க்கும் திறனே, போற்றத்தக்கது. இந்த அருஞ் செல்வத்தை முற்காலப் புலவர்கள், நிரம்ப பெற்றிருந்தனர். அவர்தம் கண்கள், எதனையும் கூர்ந்து கவனிக்கும் என்பது மட்டுமல்ல, கண்டதனை நெஞ்சத்தில் பதிய வைத்துக் கொள்வர். தேவைப்படும்போது, எடுத்துத் தொடுத்துத் தருவர், கவிதையாக.

தமிழகம் எழில் குலுங்கும் பூங்காவாக விளங்கிய காலம், இயற்கை இன்முகம் காட்டி இருந்த நாட்கள், புலவர்கள், இயற்கையின் எழிலையும் வகையையும் கண்டு கண்டு களிப்பர். காண்பனவெல்லாம், களிப்பூட்டுவதுடன், கருத்தளிக்கும். பெறவேண்டிய பேரறிவு அனைத்துக்கும் ஏடு தூக்கியா வாடிட வேண்டும்? என்னினும் திறமிகு ஆசானும் உண்டோ? என்று இயற்கை கேட்டது. ஓங்கி வளர்ந்த தருக்களும், அவற்றினிலே தங்கி இருந்த பறவைகளும், குன்றுகளும், ஆங்கு குதித்தோடிய அருவிகளும், அதன் சலசல ஒலியும், ஆங்கு, நீர் பருகி, மகிழ்ச்சியை இசை

யாக்கித் தரும் புள்ளினமும் காண்பதிலே, சங்ககாலப் புலவர்களுக்கு, பெரு விருப்பம்; கண்ட காட்சிகளைக் காலத்தை வெல்லும் கவிதைகளாக்கித் தந்து சென்றனர்; அதனாலேயே இன்றும் அந்தக் காட்சிகளை நாம் காண முடிகிறது.

நேர்த்தியான நீரோடை! ஆங்கு உலவுகிறார் கவிஞர் நீர்க்குமிழி இளமை, நீர் மேல் எழுத்தாகும் வாழ்வு, என்று கூறிப் பயமூட்ட அல்ல. எத்துணை அழகு, இந்த நீரோடை, என்று வியந்து பார்க்கிறார். கரையிலே மாமரம்! மாம்பிஞ்சொன்று கீழே வீழ்கிறது. மாமரம் நீரோடைக் கரையிலே இருப்பதால், கீழே விழும் மாம்பிஞ்சு, நீரில் விழ்கிறது. அது விழும்இடத்தில், தாமரை! தாமரை மீதுதான், மாம்பிஞ்சு விழுகிறது! பக்கத்திலே ஆம்பல்! அந்த ஆம்பல் மலருகிறது!

இதைக் காண்கிறார், புலவர். களிப்பு அவருக்கு! என்ன அழகான காட்சி என்று எண்ணுகிறார். நாம் காண்கிறோம், மகிழ்ச்சி பெறுகிறோம். இதனைக் காணாதார் பலர் உளரே; அவர்கள் எத்தகைய மகிழ்ச்சியை இழந்து விடுகின்றனர் என்று நினைக்கிறார். எல்லோரையும் கூவி அழைத்து, தாம் கண்ட காட்சியைச் சொல்லி விடவேண்டும் போல் தோன்றுகிறது. நீரோடை! அதிலே தாமரை! செந்நிறத்தாமரை மீது பச்சை நிறமான மாம்பிஞ்சு! அதற்குப் பக்கத்தில், ஆம்பல் மலர்ந்திருக்கிறது, பால் போன்ற நிறத்துடன். இந்தக் காட்சியை நமக்கெல்லாம் காட்ட வேண்டும் என்ற பரிவு, பாவாகச் சுரக்கிறது.

புதுநீர புதுலொற்றப் புணர்திரைப் பிதிர்மல்க
மதிநோக்கி அலர்வித்த ஆம்பல் வான்மலர் நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை கரைமாவின்
வடிதீண்ட வாய்விடு உம்!

புலவர், நம்கண்முன் புது நீரோடை, கரையினுள்ள மாமரம் தாமரை, ஆம்பல், எல்லாவற்றையும் காட்டி விடுகிறார்.

மாம்பிஞ்சு விழுகிறது, தாமரைமீது; ஆம்பல் மலரு கிறது! இது தெரிகிறது.

நாம் கண்ட காட்சியை மற்றவர்களும் காணும்படி, கவிதையாக்கித் தந்து விட்டோம் என்று திருப்தி ஏற் பட்டதா புலவருக்கு? அதுதான் இல்லை! காட்சி தெரியும், கவிதை வடிவில்! காண அழகாகவும் இருக்கும், ஏனெனில் கண்டதைக் காணத்தக்க விதமாகத் தந்துள்ளோம். ஆனால், இந்தக் காட்சியைக் கண்டதும், நமக்கு வேறோர் காட்சியு மன்றோ தோன்றுகிறது; தோன்றுவதுடன் அதுபோலல்லவா இது இருக்கிறது என்று எண்ணுகிறோமே! அதனையு மன்றோ, மற்றவர்க்கும் வழங்குதல் வேண்டும்; சுவையும் பயனும் அப்போதுதானே கிடைக்கும், என்று எண்ணுகி றார். கவிதை பிறக்கிறது.

நீரோடை! கரையில் மாமரம்! மாம்பிஞ்சு விழுகிறது! செந்தாமரை அதனைத் தாங்கிக் கொள்கிறது! ஆம்பல் பக்கத்தில் பூத்திருக்கிறது! இது காட்சி! என்னென்ன வண்ணங்கள்!

பச்சை—வெண்ணிறம் கலந்த சிகப்பு—பால் வெண்மை!! இத்தனையும்!

இவை அமைந்திருக்கும் விதம், கவனிக்க வேண்டாமா?

செந்நிறத் தாமரைமீது பச்சைநிற மாம்பிஞ்சு, அதற்குப் பக்கத்தில் பால்நிற ஆம்பல்!!

அழகாக இருக்கிறதல்லவா? ஆமாம்! எதுபோல இருக்கிறது? புலவர் எண்ணுகிறார்; எண்ணியதும், அவருக்கு வேறோர் காட்சி தெரிகிறது.

செந்தாமரை முகமுடைய செல்வி, கோபம் கொண்ட கிளி! அதற்கு ஊட்டக் குவளையில் பால் ஊற்றித் தருவது!! இந்தக் காட்சி தெரிகிறது

அதுதானே இது! இதேதான் அது!! புலவர் பூரிப்படைகிறார்.

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்
துணைபுணர் அன்னத்தின் தூவி மெல்லணை அசைஇச்
சேடியல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி
ஊடு மென் சிறுகிளி உணர்ப்பவள் முகம்போல!

என்று கூறுகிறார்; கூறிவிட்டு, அந்த முகம்போல, இந்தத் தாமரை, அந்தக் கிளிபோல, இந்த மாம்பிஞ்சு, அந்துப் பால் வட்டில்போல, இந்த ஆம்பல் என்று கூறுகிறார். காட்சியின் அழகும் அருமையும் அப்போது எவருக்கும் முழுவதும் விளங்குகிறது.

இரண்டு காட்சிகளையும் காணச் செய்கிறார். ஆனால் ஒரே கணம்தான், மறுகணமோ, இரு காட்சிகளும் இழைந்து ஒரே காட்சியாகி விடுகிறது.

நாம், கவிதையைப் படிக்கும் போது, நாம் நேரடியாகக் காணாத அந்த அரிய காட்சியைக் காண முடிகிறது. கவித்திறன் மட்டுமல்ல, தமிழகத்தின் எழில் தெரிகிறது. எழில் மட்டுமல்ல, எழில் கண்டு மகிழ்ந்திடும் பண்பு பெற்ற இனம், தமிழினம் என்ற வரலாறு தெரிகிறது.

புன்னகையும் பிறக்கிறது, பெரு மூச்சும் கிளம்புகிறது.

அத்தகு புலவோரின் திரு இடம், தமிழகம் அன்றோர் நாள்!!

நீரோடை காண்போம்! அதோ மாம்பிஞ்சு வீழ்கிறது, செந்தாமரை மீது! ஆம்பல் பூத்திடக் காண்கிறோம்.

பால் பருகு பைங்கிளியே! கோபமேன், அஞ்சகமே என்று கேட்கிறாள், செந்தாமரை!! அதைக் கண்டு இன்புற்றிருப்போம்—மற்றதை இவ்வேளை மறந்து.

[முற்றும்]

# அண்ணாவின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| நீதிதேவன் மயக்கம் | (நாடகம்) | ரூ. 6.00 |
| சந்திரமோகன் | (சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்) | 9.50 |
| இன்ப ஒளி | (நாடகம்) | (அச்சில்) |
| கண்ணாயிரத்தின் உலகம் | ,, | 8.40 |
| வேலைக்காரி | ,, | 7.80 |
| சந்திரோதயம் | ,, | 6.90 |
| கோமளத்தின் கோபம் | (சிறுகதைகள்) | 7.90 |
| கன்னி விதவையான கதை | ,, | 5.90 |
| செவ்வாழை | ,, | 9.50 |
| இரு பரம்பரைகள் | ,, | 9.60 |
| மக்கள் தீர்ப்பு | ,, | 9.50 |
| பவழபஸ்பம் | ,, | 6.90 |
| அப்போதே சொன்னேன் | ,, | 6.00 |
| வெள்ளை மாளிகையில் | ,, | (அச்சில்) |
| பிடிசாம்பல் | (வரலாற்று ஓவியம்) | 9.50 |
| இரும்பாரம் | ,, | 8.90 |
| கலிங்கராணி | (வரலாற்று நவீனம்) | 17.50 |
| தசாவதாரம் | ,, | 10.90 |
| அண்ணாவின் கவிதைகள் | (கவிதை தொகுப்பு) | 13.90 |
| சொர்க்கவாசல் | (நாடகம்) | 12.90 |
| பித்தளையல்ல பொன்னேதான் | (சிறுகதைகள்) | 9.50 |
| வண்டிக்காரன் மகன் | ,, | 9.50 |
| இரும்பு முள்வேலி | ,, | 9.50 |
| கடைசிக் கனவு | (குறுநாவல்) | 6.00 |
| அரசாண்ட ஆண்டி | ,, | 7.90 |
| குமஸ்தாவின் பெண் | ,, | (அச்சில்) |

**தேவைகளுக்குப் புத்தக விலையுடன் ரூ 2. 50 தபால் செலவுக்கு சேர்த்து M. O. செய்க.**



## பேரறிஞர் அண்ணா

அண்ணாவின் பலதிற ஆற்றல் எவரையும் திகைக்க வைக்கக் கூடியது. பொதுமேடை வானில் முன்பு ஒளிர்ந்த மின்மினிகள், விண் மீன்கள், பிறைமதியங்கள் யார்வும் ஒதுங்க, பேரொளி வீசிப் புதுப் பொழுது மலரச் செய்யும் 'வெங்கதிரவன்' அண்ணா அவர்களே என்பதை அறியாதார் இலர். எழுத்துத் துறையிலும் சுவை குன்றாது, எபபொருள் பற்றியும் அறிவுப் பயன் நிறைவுறும் வண்ணம், எத்தனைப் பக்கம் வேண்டுமானாலும் எழுதும் திறன் அவர் தனி யுரிமையே ஆகும். எழுத்துக்கு ஒரு நடை, மேடைப் பேச்சிக்கு ஒரு நடை உரையாடலுக்கு ஒரு நடை என்பது அவரிடம் காணமுடியாது. இருந்தால் இருப்பார்; எழுந்தால் எதிலும் ஒரே காளமேகந்தான்.

**பூம்புகார் பதிப்பகம்**
**63, பிராட்வே, சென்னை-600 108**